Registered No M. 878.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிராஹ்மணாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதாவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 2 { 1911௵ டிசம்பர்௴ 15௳
விரோதகிருது௵ கார்த்திகை௴ 30௳ } பகுதி 8.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| டில்லிமாநகரில் மாட்சிமைதங்கியசக்கரவர்த்தி அவர்களின் பட்டாபிஷேகம். | பத்திராதிபர். | உ௬௫ |
| மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ மன்னர் பட்டாபிஷேகமும், டில்லிதர்பாரும் | பி எஸ். சுப்பிரமணிய ஐயர். | உ௬௮ |
| முடிசூட்டு வாழ்த்து—எஸ். சாமிநாதையர். | | உ௭௩ |
| சிக் மடங்கள்—ஆர். வ. சாஸ்திரி. | | உ௭௭ |
| 'ஹிந்து' என்பவன் எவன்?—ப. நா. | | உ௮0 |
| ஸந்மார்க்கமுறையும் ஸம்ஸாரியும்—ப. நா. | | உ௯0 |
| புத்தக வரவு, சமாசாரம் | பத்திராதிபர். | உ௯௬ |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | | |


---


# The Swadeshi Life Assurance Co., Ltd., BOMBAY.

## ஹெட் ஆபீஸ் பம்பாய்.

மூலதநம் ரூபாய்—பத்து லெக்ஷம்.

Honourable லல்லுபாய் ஸாமல்தாஸ் அவர்கள்—சேர்மேன்.

மிஸ்டர் ஜியார்ஜ் கிங் துரை அவர்கள் F. F. A F. I. A. (London) } ஆக்சுவரி

K. சுப்பிரமணிய அய்யரவர்கள் B. A. F. S. A. A. (London) J. P. ஹானரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் F. M. U. F. B. U. பம்பாய் } மானேஜர்.

எம். கே. இராஜகோபாலசாரியார் அவர்கள் F. T. S., பப்ளிக் அகவுண்டெண்டு and ஆடிடர் of "K. R. Chari Brothers" West Tower Street, Madura. } சென்னைராஜதானியின் சீப் ஏஜண்டு. Chief Agents.

எல். புருஷோத்தமநாயுடுகாரு F. T. S. எடமணல், சியாழி தாலூகா ஏஜண்டு.

ஜில்லா, தாலூகா, டவுன் ஏஜண்டுகள் தேவை.

..தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

வரலாற்று விளம்பரம் (Prospectus) முதலியவைகளுக்கு கே. ஆர். சாரி பிரதர்ஸ், மதுரை என்னும் விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்:

Please Compare our rates and conditions before insuring your life with any other company.

Apply for Agencies and other particulars to

Messrs. K. R. CHARI BROTHERS,
*West Tower Street, Madura.*

284

*Supplement to the "Poorna Chandrodayam"*




மாக்ஷிமை தங்கிய
ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தி.



அன்பின் வழியது
என் அரசியல்



மாக்ஷிமை தங்கிய
மேரி சக்கரவர்த்தினி.

MADRAS : THE GUARDIAN PRESS, MOUNT ROAD

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2 } 1911ஆம் டிசம்பர்மீ 15உ
விரோதகிருதுஆம் கார்த்திகைமீ 30உ { பகுதி 8.

## டில்லிமாநகரில் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தி அவர்களும், சக்கரவர்த்திநீ மேரி அம்மை அவர்களும் நாளிது டிசம்பர்மீ 12உ யில் டில்லிமாநகரில் மகுடாபிஷேகம் பெற்றார்கள். இந்த வைபவம் விமரிசையாயும், குதூகலத்துடனும், பரமேசுவரனின் பூர்ணமான கடாக்ஷவீக்ஷணத்தின் அருளால் சூக்ஷ்மபூமிகளில் தேவர்கள் சாந்நித்தியத்துடனேயும் பலதேச முடிமன்னர்களும் அவர்கள் பிரதிநிதிகளும் சூழவும், அளவிறந்த பிரஜைகள் நிற்கவும், நடைபெற்றது. இந்த உயர்நலம் அமைந்த உத்ஸவத்தின் விவரணங்களை வெளியிட வார்த்தைகள் சக்தியற்றன; மாற்றங்கடந்த காட்சி இது. இதுகாறும், உலகம் தோன்றிய காலமுதல், புராண வாயிலாகவும், சரித்திர வாயிலாகவும் நாம் தெரிந்துகொண்டமட்டில், நடைபெறாத ஸம்பவம் இது. இந்தியா தேசம் முழுமையும் ஒரே குடையின் கீழ் இதுவரை ஒருங்கே சேர்க்கப்பெற்று இருந்திருப்பதில்லை. இப்போது மகுடாபிஷேகம் பெறும் நமது சக்கரவர்த்தியின் ராஜ்யம், மிகப்பெரிதானது. இதற்கு முன்னர் இவ்விஸ்தீரணமான ராஜ்யத்தைப் பரிபாலநம் செய்யும்படியான பாக்கியத்தை ஒரு சக்கர

வர்த்தியும் பெற்றார் இல்லை. ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியும், ஸ்ரீ தர்ம புத்திரரும் அரசாண்ட ராஜ்யம் நம்முடைய இந்தியா தேசத்தின் ஒரு பாகம்தான். பெரும்பான்மையான பாகம் பல தனியான சிற்றரசர்களுடைய சுவாதீநத்தில் இருந்தது. கார்தேஜ் ராஜ்யம் என்ன, கிரேக் ராஜ்யம் என்ன, ரோமாபுரி ராஜ்யம் என்ன, பின்னர் சமீபகாலத்தில் நடைபெற்ற, ஸ்பானியா ராஜ்ய மென்ன, இவை எல்லாம், பிரகிருத பிரிடிஷ் ராஜ்யத்தை நோக்க, அற்பமானவைகளாகவே தோன்றும். இந்த ராஜ்யம் சூரிய அஸ்தமநமே நேரிடாதபடி உலகம் முழுமையும் பரவியிருக்கின்றது. உத்தர துருவத்திலும், தக்ஷிண துருவத்திலும் கூட இந்த ராஜ்யத்தின் தீபங்கள் இருக்கின்றன. இந்த இராஜ்யத்தினது விஸ்தீரணம் பூமியின் மேற்பரப்பின் ஐந்தில் ஒரு பாகத்திற்கு அதிகமானது; ஒரு கோடியே பன்னிரண்டு லக்ஷம் சதுரமைல் அளவுள்ள ராஜ்யம் இது. நிலவளம், மழைவளம், மலைவளம், நீர்வளம், பொருள்வளம், எல்லாம் பூர்ணமாய் அமையப் பெற்றதாய் உள்ளது. உலகத்தில் 180 கோடி ஜநங்கள் வஸிக்கின்றார்கள். இந்த பிரிடிஷ் ராஜ்யத்தில் மட்டும் 41 கோடி ஜநங்கள் வஸிக்கின்றார்கள். அவர்களில், 31 கோடி ஜநங்கள் நம்முடைய இந்தியா தேசத்தில் வஸிக்கின்றார்கள். உலகில் உலாவும் எல்லாப் பாஷைகளும், இந்த ராஜ்யத்தில் நடைபெறுகின்றன. நமது இந்தியா தேசத்தில் மாத்திரம் 147, வித்தியாஸமான பாஷைகள் வழங்கிவருகின்றன. அவைகள் எல்லாம் பெரும்பாலும் இரண்டு பெரிய பாஷை வர்க்கங்களில் அடங்கும். ஸம்ஸ்கிருதத்தினின்று உண்டானவை எல்லாம் வட இந்தியாவிலும் மேற்கு இந்தியாவிலும், திராவிட பாஷைகள் எல்லாம் தென்னிந்தியா கீழ் இந்தியாவிலும் வழங்கி வருகின்றன.

இவ்விதமான ஐசுவரியம் பொருந்திய ராஜ்யத்திற்குப் பிரதாந பட்டணம் லண்டன்மாநகர். இது நமது இராஜ்யமாகிற லக்ஷ்மிக்கு ஒரு நேத்திரமாக விளங்குகிறது. அதற்கு மற்றொரு கண் இன்றியமையாதது. இதுகாறும் மங்கலாக விருந்தது. இப்போதுதான் அது பிரகாசித்தது. அஃது ஆதி குருக்ஷேத்ரமாகிய ஹஸ்திநாபுரம் என்ற டில்லிமாநகரம். "தர்ம க்ஷேத்திரம் இது."

மஹாத்மாக்களின் அநுக்கிரகம்பெற்ற ஸ்தானம் இது. இப்புண்ணிய பூமியில் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் என்பார் பட்டாபிஷேகம் பெற்றார். இது நம் தேசத்தின் இனிவரும் நற்காலத்தைச் சூசிப்பிக்கின்றது. இந்த உத்ஸவத்தின் மூலமாய், நம் தேசம் நலம் பெறுவதுடன், உலகமெங்கும் எல்லா நலமும் உண்டாகும்.

நமது சக்கரவர்த்தி அவர்கள் "அன்பின்வழியது அரசுமுறை" என்பதாக ஒரு சபையில் பிரஸ்தாபித்தார்கள். அதுவே அவரது குலவிருதாம். இவர்களுடைய பிதாமகியாகிய நம்முடைய உலக மாதாவாகிய விக்டோரியா மஹாராணி அவர்கள் இத்தேசத்தின் நேரான ஆளுகையைத் தாம் வகிக்கப் புகுங்காலத்தில் சொன்ன திவ்வியமான உயர்நலம் அமைந்த மொழிகள் சந்திர சூரியர்கள் உள்ளமட்டும் உலகில் தங்கும் இயல்பின. "நம்முடைய பிரஜைகளின் சுகிருதமே நமது பாக்கியம்." என்றார். அவர்களின் திருக்குமாரரான எட்வார்டு சக்கரவர்த்தி அவர்களும், தம் தாயாரின் அத்திருவாய்மொழிகளைச் சிரமேற்கொண்டு நம் தேசத்திற்கு அன்பும் ஆதரவுமாக இருந்தனர். அவர்களின் புதல்வராகிய மாட்சிமை தங்கிய நம்முடைய ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களும் குல தர்மத்தை அநுஸரித்தவராக "அன்பின்வழியது அரசியல்" என்ற செங்கோல் முறையை நடத்துவார். அவ்விதம் நடத்த வலிமையையும் குறைவில்லாத சக்தியையும், தீர்க்க ஆயுளையும், அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.* எல்லா மங்களங்களும் உண்டாவதாக. இவருடைய ராஜ்யத்தில்,

"வன்பெரு வானக முய்ய அமர ருய்ய
மண்ணுய்ய, மண்ணுலகில் மனித ருய்ய,
துன்பமிகு துயரகல, அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ". —பெருமாள் திருமொழி.

என இறைவனைப் போற்றுவாம்.

வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்,
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. —ஸ்ரீ ஞானசம்பந்தர்.

பத்திராதிபர்.

---

* இந்தப் பத்திரிகை ஜநித்த காலமும் நமது சக்கரவர்த்தியின் ஆளுகை ஆரம்பித்த காலமும் ஒன்றே.

# மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜு மன்னர் பட்டாபிஷேகமும், டில்லி தர்பாரும்.

---

பூமேவு பல்லுயிர்க ளூனமற மேன்மையொடு பொருந்தி வாழ
நாம்வாழ நாடனைத்தும் வாழவுல கெங்குமுயர் நடுவு வாழ
மாமாது மகிழ்ந்தொருகாற் றிங்கள்குல மன்னர்முடி மருவி வாழ்ந்த
சீமேவு மந்தினமா நன்னகரிந் நாள்வாய்ந்த சிறப்பைக் கேண்மின். (1)

தேவகியும் கோசலையும் போன்றமர்ந்த விக்டோரியாச் செல்வி யீன்ற
பூவலனே ழாம்எட்வர்ட் புண்ணியவான் பெற்றவரும் புதல்வ னிந்நாட்
காவலனாந் தாம்ஜார்ஜென் கண்மணிவிண் ணோர்வியந்து களிக்க வன்பாய்
மேவிடில்லி மாநகரில் பொன்மகுடம் பூண்டவுயர் விந்தை யென்னே. (2)

ஞாலமிசை வெற்றிபுனை மன்னரெலாம் கைகூப்பி நயந்து போற்றச்
சாலநிதி யம்பெருகும் செல்வரும்வந் தானவுயர் சபைமீ தார்ந்த
சீலமுட னைந்தாம்ஜார்ஜ் மன்னர்மணி பட்டாபி ஷேகம் பூண்ட
கோலமதைக் கண்ணுறவா யிரம்விழிபோ தாவெனவே கூறல் நேராம். (3)

நம்மரசன் முடிபூண்ட நாட்புனித நாட்குருதன் நட்பு வீடாம்
செம்மைநிறை விருச்சிகத்தி லேபரிதி புந்தியுடன் சேர்ந்து லாவ [கப்
விம்முமிட பத்திருந்தன் ணோரையும்சிங் கத்தையுஞ்சேய் விரைந்து நோக்
பம்மலறு மாநிரைசேர்ந் திவ்வுலகம் மோதமுறப் பலித்த நாளே. (4)

அந்நா ளேசுபிறந் திருபத்தாம் நூற்றாண்டி லைந்தோ டாறாய்
வந்தவரு டம்டிசம்பர் மாதமதில் ஏழாநாள் மற்று மீரா
றுந்துதினம் கூடுவிரோ திகிர்தாண்டில் தேளிலினன் உலவு மாதத்
தந்தமொடு குருவாரம் சேய்வார மிருநாளி லமர்ந்த தன்றே. (5)

வேறு.

இம்முறை நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த நாட்டிற் கெல்லாம்
உய்ம்முறை யல்லால் மற்றோர் துயர்முறை யுறுவ துண்டோ
நம்முயி ரெல்லா மோம்ப நாடிநந் நாடு வந்து
செம்மையாய் ஜார்ஜு மன்னன் திகழ்முடி தரித்த லாலே. (6)

பண்டைநாட் பெருமை மிக்க படர்நுட் சேத்ரந் தன்னில்
மண்டலம் புகழும் அத்தி னபுரி மகிழ்வுற் றேங்கக்
கண்டகண் களிக்க ஜார்ஜென் காவலன் மகுட மங்கு
கொண்டதிந் நாட்டின் க்ஷேமக் குறியெனத் துணிந்து சொல்வாம். (7)

மன்னவ ராணை போற்றும் மாண்புளார் நிறையும் பண்பால்
முன்னுயர் அரசநீதி முதிர்ந்தநன் னடை தென்று
மன்னிஅன் பாக டில்லி மாநகர் தன்னில் மன்னன்
துன்னுநன் மகுடம் சென்னி சூடிய தவற்கும் மேலாம். (8)

கதிரவன் மறையா தோம்பும் கண்ணகல் புவனம் தாங்கித்
துதிபெறு மாங்கி லேயத் துரைத்தனத் தார்க்கிந் நாடு
மதிவிலை யொன்றில் லாத மாமணி யாதல் பற்றிப்
பதிபுனை முடிமேற் சூடும் அணியெனப் பவித்த தஃதே. (9)

ஓய்விலாத் திரிதல் வாய்ந்த உலகினில் முன்னாள் தொட்டுப்
பாயுநீர் நிறைந்த மத்யத் தரைக்கடல் பதவி மேலாய்
தாயவோர் பினிஷி யாக்ரீஸ் தலங்குரோம் ஒன்றின் பின்னொன்
றாயுல காண்ட காலம் ஆனதிங் கறிவர் ஆரும் (10)

பின்னதல் அந்தி லாண்டிக் பெரியசா கரம்மாண் புற்றப்
பன்னுயர், ஸ்பெயின், போர்ச்சுக்கல் பரிவுசேர் அமெரிக் காவின்
துன்னுயர் ஐக்ய நாடு தூயவங் கிலநா டோர்கால்
உன்னியொன் றோடொன் றூர்ப்பாய் உயர்வுற முயன்ற காலம். (11)

சென்றிட ஸ்பெயின், போர்ச்சுக்கல் தேய்வுற ஸ்பெயினு மந்நாள்
வென்றிடத் தொகுத்த ஆர்மே டாப்படை மெலிந்து வீய
இன்றுயர் ஐக்ய நாடும் இங்கிலாந் தரசும் வெற்றி
ஒன்றிடப் பொருது மேனும் அங்கில முயரு மன்றே. (12)

அங்கிலம் கடலுக் கெல்லாம் அரசியாய் அமையும் பண்பால்
மங்கிடா தவளே மேலாய் வளர்வுறு நாட்ட மேலாய்த்
திங்களும் கதிரு முள்ள நாளெல்லாம் திகழ்வ ளென்னச்
சங்கையே தொருத்தி யாயித் தரணியை யாள்வ ளன்றே. (13)

திண்ணமாய்ப் பனுமாக் கால்வாய் திறந்திடில் பஸிபிக் ஆழி
தண்ணிலும் தரையின் மீதும் தலைமைவாய்ந் திடும்பின் ஜப்பான்
நண்ணுயர் ருஷ்யா ஐக்ய நாடு ஜர்மெனி ஆஸ்ட்ரேல்யாக்
கண்ணவாம் இங்கி லாந்தன் றாசுறப் பொருது மம்மா. (14)

இவ்விதஞ் சிலநாட் போக இங்கிலாந் துலக மெல்லாம்
துவ்வியோ ராட்சி யாகத் துலங்கிநல் விசயம் பூணும்
ஒவ்வுறு மாங்கி லேய பாஷையே யுலக மெங்கும்
தெவ்வறப் பரவி மேலாய்ச் சிறந்திடும் திண்ணந் தானே. (15)

வேறு

இப்பு விக்கர சாயமை யிங்கிலாந்
தொப்பி லாப்புக ழொன்றிடப் பின்னரும்
எப்ப டித்தலை யாம்நகர் என்றுயாம்
செப்ப லாமெழில் லண்டனைந் திண்ணமாய். (16)

அந்த நன்னக ரந்தொலை யானதால்
இந்தி யாஇடை யேயமை வுற்றதால்
சந்த தம்புகழ் தாங்கிய டில்லியே
அந்த மார்தலை யாம்நக ராகுமே. (17)

என்று சம்பவம் இம்முறை யாகுமோ
அன்று தான்நமக் காம்தவத் தின்பயன்
வென்றி யாம்பெறு நாளது வேறொரு
நன்றி வேண்டுவ ரோசொலிந் நாட்டினர். (18)

டில்லி யென்னகர் தேவரும் யாவரும்
தொல்லை மன்னரும் எத்திடுந் தூய்மைசேர்
எல்லை யாங்துநட் சேத்திரந் தெய்தலால்
நல்ல மங்களம் பெற்றதிந் நாடெலாம். (19)

ஈசன் மெய்யரு ளாலெம திந்தியா
மாசி லாப்புகழ் வாய்ந்திரு வையகம்
பேசு மோரர சாங்கப்பர விர்த்தியை
ஒசு மேவி நடாத்திடும் உண்மையே. (20)

ஐய மொன்றிலை யிவ்விதமா மெனத்
துய்ய நம்மர சன்சுப மாகநாம்
உய்ய டில்லியி லேமுடி யுற்றதே
எய்யுஞ் சூசக மாகுமி தற்கெலாம். (21)

வேறு

பின்னுமொரு சூசகந்தான் வேண்டலேனோ
    பேதமிலா வன்புமழை பெய்ந்திந்நாட்டிற்
கன்னியுயர் விக்டோரியா யரசியான
    ஆயிரத்தெண் ணூற்றைம்பத் தெட்டாம் ஆண்டில்

துன்னுவிளம் பரமொழியால் துயரம் போக்கித்
    தோன்றுசுதந் தரம்நமக்குத் துலங்க நல்கிக்
கன்னனிகர் வாக்களித்த போதே நல்ல
    காலமெமக் குற்றதெனக் கருதி னோமால். (22)

அன்றுமுதல் நமையாண்ட அருளாம் செல்வி
    ஆயிரத்தெண் ணூற்றெழுபத் தேழா மாண்டில்
நன்றுதவச் சக்கரவர்த் தினியென் பட்டம்
    நாடுவக்கத் தான்வகித்த நன்னா ளிந்தத்
தொன்றுபுக ழாரியநா டாங்கி லேயத்
    தோடுகலந் தொருநாடாய்த் துலங்கி யென்றும்
மன்றலுற வோர்குடைக்கீழ் உயிரை எல்லாம்
    வாழ்வுபெற வைத்தனளம் மலராள் போன்றாள். (23)

அவ்வருடம் டில்லிநக ரமைந்த மன்றில்
    அன்பினொடு லிட்டனெனு மரிய கோமான்
செவ்விதழி நம்மரசி தன்கருத்தைச்
    செப்பிநம்மைத் தன்வயிற்றுச் சேய்களாகத்
துவ்விசையக் காப்பனெனத் துலங்கிச் சொன்ன
    தூயவுப ந்யாசமுஞ்சு சகமாய் எங்கும்
தெவ்வறநன் னாடுசெழித் திலகு மென்று
    தேற்றமளித் திட்டதைநாம் தெரிந்தி லோமா. (24)

பின்வரும்ஏ ழாம்எட்வர்ட் ப்ரபல பூபன்
    பேருலகந் தாங்கவென ப்ருதிவி மன்னர்
முன்னரோரா யிரத்தொடுதொள் ளாயி ரத்து
    மூன்றாமாண் டினில்மகுடம் முடித்த காலை
நன்னயமாய்ச் சொன்னசொலி னுறுதி யென்றும்
    நாம்மறக்கற் பாலதுவோ நலமோ டன்னை
சொன்னஉயர் மாற்றமெலாம் நிலைநி றுத்தச்
    சூழ்ந்துமொழிந் தானதுகு சகம்நன் கிற்கே. (25)

அத்தருணம் இப்பெரிய இந்து நாட்டை
    ஆளரசுப் பிரதிநிதியா யமர்ந்த கர்ஸன்
புத்திவலி யோடெமது சக்ர வர்த்தி
    புல்லுமெழில் வான்கருத்தைப் புகன்றிட் டேயாம்

நித்தமும்வாழ் வுறமொழிந்த வுபந்யா சத்தை
நெஞ்சமிசைத் தான்மறக்க நினையார் யாரும்
முத்தமழை பேய்ந்திடவிந் நாடு மேலாய்
மோதமுறு மென்பதற்கம் மொழியே சான்றும். (26)

இத்தனைக்கும் மேலாக விந்நாள் ஜார்ஜென்
எழிலரசன் முடிசூட விசைந்து லண்டன்
பத்தனத்தி லரசர்குழாம் பணிந்து கேட்கப்
பகர்ந்தளித்த வுபந்யாசம் பாலாய்த் தேனாய்ச்
சுத்தமுட னிந்நிலமும் உயிர்கள் யாவும்
சூழ்ந்தருந்து வானமுதாய்த் துலங்கி அன்னோன்
உத்தமனாய் அன்பினுரு வாயிந் நாட்டோர்
உய்யவருள் வானெனநல் லுறுதி செப்பும். (27)

செப்புமொழி தப்புறுமா திரைநீர் சூழ்நம்
தேசமுழு தும்செழிக்கச் சிதைவு ருத
நட்பினுட னாங்கிலரும் நாமு மோர்தாய்
நல்கியசகோதரராய் நறும்பால் தண்ணீர்
ஒப்பவுயர் ஐக்கியமா யுலகில் நோக்கம்
ஒன்றுபடத் தான்முயன்றே யுவந்திந் நாட்டில்
எப்பொழுதும் நற்சிறப்போ டினியாம் வாழ
ஈசனருள் வானெனப்பே சிடவே தையம்? (28)

வேறு

வாழ்க மன்னர் மரபினர் எங்கணும்
வீழ்க மாமழை வென்றிட நன்னெறி
தாழ்க நோவு சகந்தழைத் தோங்குக
சூழ்க மன்னன் சுகம்பெற யாருமே. (29)

கட்டளைக் கலித்துறை

நல்லார் உயர்ந்திட நந்நா டிலங்கிட நல்லெழில்சேர்
வில்லார் விஜய னிகர்ஜார்ஜு மன்னவர் மேன்மையொடு
பல்லாண்டு வாழப் பிணியற் றகலப் பகைவர்நைய
எல்லா முதவும் பரஞ்சுடர் தன்னை இறைஞ்சுவமே. (30)

ஓம் தத் ஸத்.

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

293

# முடிசூட்டு வாழ்த்து.

## நிலைமண்டில ஆசிரியப்பா.

பூமலி தருக்கட் பொலிந்து விளங்குங்
காமலி நாடெனக் கண்டோர் வியக்கும்
பார்புகழ் நாடெம் பரதகண் டம்மே.
எண்ணரு பொருள்கள் எழில்பெற விளங்கும் -
புண்ணிய நாடிது. புனிதநா டிதுவே.
இந்நாட் டருமை இயம்பக் கேண்மோ.
பவவினை நீக்கப் பகீரதன் புரிந்த
தவத்தாற் போந்து தருக்குற் றதனால்,
சிவன்சடைப் பட்டவன் திருவரு ளாலே
புவன மெல்லாம் புனித மாக்குந்
தன்னொப் பில்லாத் தகையுறு கங்கையும்,
உமையவள் தந்தையின் உத்தரீ யம்மெனப்
பேராறு சிந்துவும் பிரமபுத் திராவும்,
சீருற விளங்கச் சிகரங்கள் செறியச்
சிவபெரு மானது செழுஞ்சடை நிகர்த்துப்
பார்மீ துயர்ந்த பனிபடு நெடுவரை
நேர்வடக் கெல்லை நிகரதற் கெதுவே;
கன்னியா குமரிக் கடல்தெற் கெல்லை,
குணகுட வேலைகள் குளிர்திரைக் கடலே,
இந்நாட் டுருவம் எங்ஙனம் மொழிகோ,
இச்சகத் திதய எழிற்குறி யென்கோ?
முச்சக மெச்சும் அச்சுதன் நச்சிய
பாஞ்ச சந்நியப் படிவ மென்கோ?
முக்குணங் குறிக்கும் முத்திரை யென்கோ?
மும்மூர்த்தி விளக்கும் முதற்குறி யென்கோ?
வசிஷ்டர் நாரதர் வான்மீகி வியாசர்
அகஸ்தியர் முதலிய அருந்தவ முனிவரும்
அறுபத்து மூவர் ஆழ்வார் அடிகளுஞ்
சித்தர் சமணர் புத்தர் குழாமும்

மும்மதம் நிறுவிய மூதறி வாளராஞ்
சங்கரர் உடையவர் மத்துவா சார்யரும்
முதலிய வித்தகர் முத்திநெறி காட்டி
நற்பதம் நல்கும் நன்னா டிதுவே.
உலகம் எத்தும் உயர்வட மொழியும்
நலப்பல சிறந்த நாட்டு மொழிகளும்
உலாவப் பெற்ற உத்தம நாடிது.
குவலயத் தோர்க்குக் குருவா யென்றும்
பவக்கடல் நீக்கப் பாங்காய் ஞானம்
புகட்டும் புனிதப் பொன்னா டிதுவே.
தரணி யோர்க்குத் தசாம்ச பின்னமும்
பீஜ க்ஷேத்திரப் பெட்புறு கணிதமும்
வானசாஸ் திரமும் வைத்தியசாஸ் திரமும்
முதற்கற் பித்த முனிவர் நாடிது.
மன்னுயிர் உய்ய மாயன் கீதை
கன்னற் சுவையெனக் கழறிய நாடிது.
இரும்புவி வியக்கும் இதிகா சங்கள்
அருங்கவி யாக யமைந்தநா டிதுவே.
எழெழுத் தினிலிசை யெல்லாம் அடக்கி
வாழும் உயிரெலாம் வயப்பட உருக்கும்
குழல்யாழ் கீதம் குடிகொள் நாடிது.
கவரியும் வேங்கையும் கஸ்தூரி மானும்
சந்தமுந் தேக்குஞ் சாந்தரு நாடிது.
சிற்ப வேலையிற் செழிப்புறு நாடிது.
பொன்னும் மணியும் பொலிவுறு நாடிது.
பேரொளிக் கோஹினூர் பிறந்தநா டிதுவே.
இன்ன நாட்டினை இகலுறு மன்னர்
சொன்னாங் கருதிச் சூழ்ச்சியிற் றாக்கிப்
பன்னெடுங் காலம் படைகள் எடுத்தே
இன்னல் பலபுரிந் திழைத்தனர் தீங்கே.
அந்நாள் மோகல் அரசர் ஆள
இந்நா டொருவா றேற்றம் பெற்றது.
ஆங்கிலர் முதலிய ஐரோப் பியர்பலர்

தூங்கும் நாவாய்த் துறைபல நாடிப்
பாங்காய் வாணிபப் பயனடைந் தனரே.
மற்றவை ரோப்பியர் மழுக்க மெய்த
ஆங்கிலர் ஒருவரே ஓங்க லுற்றனர்.
அவர்குல வணிகர் ஆளத் தொடங்கினர்.
வணிகர் சங்கம் வளமுறு நாளில்,
வித்தகர் புகழும் விக்டோ ரியத்தாய்
கானிங் பிரபுவின் கால மதனில்
ஏற்றனர் இந்திய எழிலர சாட்சியை
அவ்வர சாட்சியிற் றெவ்வர் நீங்கினர்.
எவ்வழி யாலும் இடர்பல நீங்கி
ஏற்றம் பெற்றுநாம் இனிதே வாழ்ந்தனம்.
உயிரும் பண்டமும் ஓம்பப் பெற்றன.
பயிரும் மணியும் பண்புற் றோங்கின.
ஒடுங்கா உள்ளத் தொன்னலர் ஒடுங்கினர்.
இருப்புப் பாதைகள் எழில்பெறச் சமைந்தன.
தந்தித் தபாலுந் தழைத்தினி தோங்கின.
கல்வியும் ஞானமுங் களிநடம் புரிந்தன.
சம்பத் தொடுசமா தானமும் விளங்கின.
அன்னைவிக் டோரியா ஆண்டுபல ஆண்டனர்.
பின்னவர் புதல்வரிற் பெரியரா மேட்வேர்ட்
மன்னவ ராகி மாந்தர் புகழ
அன்னை காட்டிய அழகுறு நெறியில்
நன்னலம் நாம்பெற நாடர சாண்டனர்.
அவ்வர சாட்சியை அவரது புதல்வர்
ஐந்தாம் ஜார்ஜேனும் அன்புடை யரசர்
பைந்தொடி மேரியோடு பாங்காய் வகித்தனர்.
இவரெம் நாட்டின் இயற்கைநன் குணர்ந்தவர்.
நம்பொறை வணக்கம் நற்குணம் அனைத்தும்
கண்கூ டாகக் கண்டு களித்தவர்.
உன்னத குணத்தையும் உன்னி யுணர்ந்தவர்.
ஆங்கில அரசில்நாம் அடையு மகிழ்ச்சியை
ஐயந் திரிபற அகத்தினன் குணர்ந்தவர்.

அண்டர் புகழுநம் அணிபெரு நாட்டைக்
கண்டு குடிகள் கருத்துக் கியைய
அருளினைக் காட்டி யாளின் அவருளம்
அன்பால் அலருமென் றறிவித் தவரவர்
புண்ணிய நாடுசெய் புண்ணிய வசத்தால்
எம்பெரு நாட்டிற் கின்னருள் புரிய
எண்ணங் கொண்டே ஏகிநம் நாட்டில்,
திருமுகங் காட்டித் திருமுடி சூடிப்
பெருமகிழ் வளிக்கநாம் பெற்றபே றென்னே!
அன்னவர் அருளை யளவிட லரிதே!
சாலி வாகன சகாப்த மாயிரத்
தெண்ணூற்று முப்பத் திரண்டோ டொன்றினில்
பன்னிரு திங்களாம் பனிமிகு டிஸெம்பரின்
பன்னிரு நாளில் பன்னிரு மணிக்குப்
பரத கண்டத்தின் பழம்பதி டில்லியில்
முப்பத் திரண்டொர் முக்கோடி ஜனங்கள்
எத்திசை யினுமே எத்திக் கைதொழ
மகுடவர்த் தனராம் மன்னவர் பலரும்
பட்டவர்த் தனரும் பாங்காய்ப் பணியப்
பல்லியங் கறங்கப் பன்முர சார்ப்பக்
கண்டோர் மனமுங் கண்ணுங் களிக்க
மன்னுயிர் மகிழ மகுடஞ் சூடினர்.
சார்வ பௌமராய் ஜார்ஜ்சக்ர வர்த்தியும்
ஆர்வம் நிறைந்த அணியிழை மேரிச்
சக்ரவர்த் தினியும் ஜயமுற வாழி.
வாழி யவர்குலம் வளமுற வாழி.
ஆங்கிலச் செங்கோல் அழகுற வாழி.
இந்தியா இங்கிலாங் தின்புற வாழி.
குடியும் படையுங் கூழும் அமைச்சும்
நட்பும் அரணும் நலம்பெற வாழி
சத்தியம் ஞானம் சமரச பாவம்
நித்திய மாகவே நிலைபெற வாழி
வாழிய நாடெலாம் வாழிய நலனே

எஸ். சாமிநாதையர்.

## சீக் மடங்கள்.

நம் பரதகண்டத்திலிருக்கிற அநேக மதங்களில் சிக் மதம் ஒன்று. இந்த மதஸ்தர்களுக்குப் பிரதானமான இடம் வட இந்தியாவுக்கு அமிருதஸார் என்ற நகரமும், தக்ஷிணத்திற்கு கோதாவரியின் வடகரையிலிருக்கிற நாந்தேர் என்ற நகரமுமாம். நாந்தேர் என்கிற பட்டணமானது ஸம்ஸ்கிருத பாஷையில் நந்திமுகமென்றும் கோதாவரியின் நாபிஸ்தாநமாகவு மிருக்கிறது. கோதாவரி மாகாத்மியத்தில் ஒரு முக்கியமான தீர்த்தயாத்திராஸ்தலமாக இதைக் கூறியிருக்கிறது. இந்த இடத்தில் அந்த சிக் மதஸ்தர்களுடைய முக்கியரான இரண்டாவது காரணபுருஷராகிய குரு கோவிந்தஜீயென்பவருடைய் சமாதி யிருக்கிறது. இந்த இடமானது அம்மதஸ்தர்களுக்கு குரு பீடமாக வழங்கிவருகிறது. இதுவும் வடயிந்தியாவிலிருக்கிற அமிருதஸாரிலுள்ள கட்டிடத்தைப் போல் தங்கத் தகட்டால் சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதில் நடைபெறுகிற பூஜையையும் இந்த இடத்தைக் காத்துவருகிற பீடாதிபதியையும் பற்றிச் சற்று ஆராய்வோம். இந்த பீடத்திற்கு அதிபதியாக வருகிறவரை அமிருதஸார் பீடத்தலைவரும் சிக் மதாபிமாநிகளும் சேர்ந்து ஒரு நல்ல படித்தவரும் பிரஹ்மசரிய விரதம் பூண்டு தேர்ந்தவருமான ஒருவரைத் தெரிந்து எடுத்து, இவ்விடத்திற்கு அனுப்பவேண்டும். அவர் வந்தவுடன் அவரை இவ்விடத்திலுள்ளவர்கள் வருஷம் இரண்டுக்குக் குறையாமல் அவர் படிப்பு ஒழுக்கம் முதலானவைகளை நன்றாகச் சோதித்துத் திருப்தியடைந்தமேல் அவரைப்பீடாதிபதியாக நியமநம் செய்கின்றார்கள். அவர் வேலையாவது, அதிகாலையில் எழுந்திருந்து கோதாவரியில் ஸ்நாநஞ் செய்து வெகு ஆசாரத்துடன் மடத்திற்கு வந்து தம் பூர்வீகர் செய்த கிரந்தங்களைப்படித்துப் பாராயணஞ்செய்துகொண்டு, பிறகு மூலஸ்தானத்திலிருக்கிற ஸமாதிக்குப்போய் எச்சில் விழாமலிருக்கும்படி வாயை வஸ்திரத்தினால் மூடிக்கொண்டு, பெருக்கிச் சுத்தம் செய்து ஷை சமாதிக்குப் பூஜை முதலிய உபசாரங்கள் செய்து, வெண்சாமரம் போட்டுக்கொண்டிருக்கவேண்டியது. அந்த சமாதிஸ்தலத்திற்குள் இவரைத் தவிர வேறு ஒருவரும் பிரவேசிக்கக் கூடாது. இப்படிப் பத்துவருஷம் பீடத்திலிருந்து, பிற்பாடு இவ்விதமாக ஆயத்தமான

வரை வைப்பார்கள். இவர் பக்தியுடன் பூஜைசெய்யுங்கால் தூரத்திலிருந்து பார்க்கிற நமக்கும் உடனே பக்தி உண்டாகிறது. வாயைக் கட்டியிருக்கிறதினால் பேசாமலே மௌனமாகக் கைங்கரியஞ் செய்வார். மடத்திற்கு இருக்கிற அளவற்ற சொத்துக்களிலும் மற்ற சாமான்களிலும் அவருக்குப் பற்றுதல் கிடையாது. அவைகளைப் பஞ்சாயத்தார்கள் பார்த்துவருகிறார்கள். இப்படியே நம் தேசத்திலுள்ள மடாதிபதிகளையும் பீடாதிபதிகளையும் ஐந்து வருஷத்திற்கொருமுறையும் அல்லது ஏழு அல்லது பத்து வருஷத்திற்கொரு முறையும் யோக்கியர்களைப் பார்த்து அவர்களுள் உயர்நல முள்ளவர்களைத் தெரிந்தெடுத்து நியமித்துவந்தால், நம் மடங்களும் எவ்வளவு நன்றாகவேவிளங்கும்! யாதொன்று மறியாதவர்களுக்குப் பால்லியத்தில் உயர்தர ஆச்சிரமமாகியசந்நியாசங்கொடுத்து அவர்களை மடாதிபதிகளாக நியமித்தால், அவர்கள் இந்தக் கலியுகத்தில் இந்திரிய ஜயமெப்படிச் செய்வார்கள். முற்கூறிய சிக் மதஸ்தர்கள் மாதிரி கொஞ்ச காலம் உலக அநுபவத்தைத் தெரிந்த வித்துவான்களை நன்றாகப் பார்த்துச் சிலவருஷங்களுக்குப் பீடாதிபதிகளாக வைத்தால், அந்தப் பீடங்கள் எப்படி ஜ்வலிக்கும் என்பதை அறிஞர்களும் நல்லவர்களும் அறியலாம். பர்மா முதலான இடங்களிலிருக்கிற பௌத்தமதத்திலும் சந்நியாச ஆச்சிரமவகுப்பானது மிகவும் பரிசுத்தமாக நடைபெற்று வருகிறது. சிலர் சொற்ப வைராக்கியத்தினால் சந்நியாசம் வாங்கிக்கொண்டு புறப்பட்டுச் சிலகாலஞ் சென்றபிறகு, உலக விஷயத்தில் இச்சையடைந்தால் உடனே காஷாய வஸ்திரத்தையும் கமண்டலுவையும் மடத்தில் கொடுத்துவிட்டுக் கிருகஸ்தராகிவிடலாம்: அப்படி விவஸ்தை வைத்திருக்கிறபடியினால், பர்மாதேசத்தில் சந்நியாச வகுப்பு பரிசுத்தமாகவிருக்கிறது. நம்முடைய ஆரிய சாஸ்திரத்தில் சந்நியாசம் வாங்கினவன் திரும்பி கிருகஸ்தனாக ஆகக்கூடாதென்று முன் நம்பூர்வீகர்களெழுதி வைத்திருக்கிறதின் பயனாக அந்த வகுப்பு அநேகமாக அசுத்தமாகிவிட்டது. ஆச்சிரமங்களின் முறையை அந்தந்தக் காலதேசவர்த்தமானங்களையும் ஜனங்களின் யோக்கியதையையும் அநுசரித்து ஏற்ப நடைபடுத்தல் வேண்டும். முற்கூறிய சிக் மதக்கோவில்களைத்

தரிசிக்கவும் பார்க்கவும் போகிறவர்களுடைய நியமங்களைக் கொஞ்சம் சொல்லுகிறேன். எல்லாரும் சாயங்காலம் சூரியன் மறைந்தபிறகு போகவேண்டும். கோவில் வாசலில் காக்கின்ற சிபாய்களிருப்பார்கள். அவரிடத்தில் பாதரக்ஷை முதலானவைகளைக் கழற்றிவிட்டும் புகையிலைப் பொடி முதலானவைகளிருந்தால் அவைகளையும் அவ்விடத்தில் வைத்துவிட்டும் கால்களை அவ்விடத்தில் கொடுக்கப்படும் ஜலத்தினல் முழங்காலுக்குக் கீழே நன்ருகக் கழுவிக்கொண்டு உள்ளே பிரவேசிக்க வேண்டும். நம் வைதிகர்களும் கோவில் பூஜகர்களும் இடுப்பில் பொடிப்பட்டையை வைத்துக் கொண்டும் அடிக்கடி பொடியை உபயோகித்து கொண்டும் பூஜைசெய்கிருர்கள்! இது கலியின் கொடுமையாம். மூலஸ்தாநத்துக்குள் பீடாதிபதியைத் தவிர வேறு ஒருவரும் பிரவேசிக்கக்கூடாது. வெளியில் அவர்களின் மத கிரந்தங்களை வெகு பக்தியுடன், பூஜை கிரமமாக நடைபெறும் பொருட்டு, ஒரு வித்துவான் படிப்பார். அதை யாரும் கேட்பார்கள். சிக் மத கிரந்தங்கள் குருமுகி பாஷையில் உள்ளன. கடைசியில் கர்பூர ஆராத்தியாகும்பொழுது எல்லா பக்தர்களும் குருவை வந்தநம் செய்துவிட்டுப் பிற்பாடு ஒருவர் மற்றொருவரைத் தொழுவார்கள். ஒருவரும் கோவிலுக்குள் பேச்சுமூச்சு விடக்கூடாது. நம் கோவிலில்தான் தர்சநத்திற்குபோகிறவர்கள் தங்களுடைய உலகயோகக்ஷேமாதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டு போலியான ஆராதனை செய்கிருர்கள். இத்தகையர் சிக் மதஸ்தர் கோவிலில் இருந்தால் அங்கங்கே இருக்கிற சிபாய்கள் உடனே அப்படிச் செய்கிறவர்களை வெளியேற்றிவிடுவார்கள். அந்த விடத்திலிருக்கிற அந்த பீடாதிபதியையும் மற்ற பக்தர்களையும் பார்த்தவுடன் தற்சமயத்தில் ஒரு வைராக்கியமும், அதனல் நம் மாதத்துக்கு ஒருவிரக்தியும், நம் கோவிலிலும் மடத்திலிலும் இப்படி யில்லையே என்று ஒரு அநுதாபமும், உண்டாகும். சிக் மதஸ்தர்கள் வழிபடும் முறைகளைப்பார்த்து நம்முடைய ஏனைய ஹிந்து ஆலயங்களும் மடங்களும் சீர்திருத்தம் பெறுமென ஈசுவரனைப் பிரார்த்திக்கின்ருேம்.

ஆர். ஏ. சாஸ்திரி.

# ‘ஹிந்து’ என்பவன் எவன்?

[குறிப்பு:—ஹிந்து மதத்தின் முக்கிய கொள்கைகள் எவை? ஹிந்து என்பவன் எவன்—அவனுடைய இன்றியமையாத முக்கிய லக்ஷணங்கள் யாவை. இவ்விஷயங்களைப்பற்றி அலஹாபாத் நகரில் நடைபெறும் லீடர் (Leader) என்னும் ஆங்கிலப் பத்திரிகையினதிபர் நம் தேசத்திலுள்ள பல அறிஞர்களின் அபிப்பிராயங்களை ஒருங்கு சேர்த்துப் பிரஸித்தம் செய்துவருகின்றார். அவைகளில் ஸ்ரீ பாபு பகவந்தாஸர் அவர்களின் அபிப்பிராயத்தை அநுசரித்து அடியில் வருமாறு எழுதப்பட்டுள்ளது.]

1. இக்கேள்விக்குச் சுருக்கமான விடைகள் கொடுத்தல் முடியாதது. உலகில் இப்போது நடைபெறும் ஏனைய மதங்கள் அதை அதை ஸ்தாபித்தவரின் பெயர் கொண்டு வழங்குகின்றமைபோல, ஹிந்து மதத்தை ஸ்தாபித்தவர் இன்னார் என சொல்லமுடியாமையால், ஒரு மஹாபுருஷன் பெயர் பற்றி அம்மதம் நிகழ்வதின்றாம். மற்றைய மதங்களை ஸ்தாபித்தவரின் பெயரை நீக்கி, அம்மதக் கொள்கைகளை ஸமஸ்கிருத பாஷையிலாவது, சுதேச பாஷைகளிலாவது மொழிபெயர்த்தோமாகில், அக் கொள்கைகள் ஹிந்துமதம் என்று சொல்லப்பெறும் மதத்தின் கொள்கைகளாகவே தோன்றுமியல்பின. எல்லா மதங்களின் கண்ணுள்ள தத்துவ விஷயங்கள் இம்மதத்தின் கண்ணடங்கும்.

2. ‘ஹிந்து’ என்ற பதம் நம்முடைய கிரந்தங்களில் உபயோகிக்கப் பெறவில்லை. அதனால் ‘ஹிந்து’ என்ற தனிமொழியும், ‘ஹிந்துமதம்’ என்ற தொடர்மொழியும் புதியவை. பெரும்பாலர் அபிப்பிராயத்தில், ஹிந்து என்ற மொழி ஸிந்து என்ற மொழியின் பாரிஷ் பாஷையின் திரிபு. ஹிந்துஸ்தானம் ஸிந்து நதிக்கரையின் வாசிகளின் இடம் எனப் பொருள்படும். பின்பு இஃது இந்தியாதேச முழுமைக்கும் ஏற்பட்ட சொல்லாக இருக்கிறது.

நம்முடைய மத கிரந்தங்களில், ஹிந்துசமயம் என்பதற்கு வியக்தமாக ஒரு பெயர் ஏற்பட்டு வழங்கிவந்ததாகத் தெரியவில்லை. பற்பல பெயர்கள் அடியில் வருமாறு அந்தந்த நோக்கத்திற் கேற்ப, வழங்கிவந்திருக்கின்றன.

வைதிக தர்மம் (அறிவை காட்டும் முறை.)

சநாதந தர்மம் (என்றுமுள்ள சமயம்.)

மாநவ தர்மம் (மனிதன் தர்மமுறையை, நீதிமுறையைக் கற்பிக்கும் சமயம்.)

**வர்ணதர்மம்** (ஜாதிகளின் வர்ண விவஸ்தைகளை ஏற்படுத்தும் சமயம்.)

**ஆச்சிரம தர்மம்** (மனிதனின் ஆச்சிரம விவஸ்தையைச் சீர்ப்படுத்தும் சமயம்.)

**ஆரிய மதம்** (சன்மார்க்கம்.)

**பிராஹ்மி திருஷ்டி** (பெரிய தர்சனம்.)

**வேதசாஸ்திரம்** (ஸர்வஞானமுறை.)

3. இன்ன கொள்கைகள், இன்ன அநுஷ்டானங்கள், இன்ன ஆசாரங்கள், ஹிந்து மதத்தின் இன்றியமையாதவைகள் என வியக்தமாகத் தெரிவிக்கமுடியாவாம்.

(A) வெளிப்படையானவைகளான ஆசாரங்கள் முதலியவைகளை ஆராய்வோம்—

(1) சிகை, சூத்திரம் (பூணூல்) முக்கியமானவையல்ல. சூத்திரர்கள், அவர்களுக்கு கீழான (தீண்டா ஜாதி எனப்படுமவர்கள்) ஜாதியார்கள் அவைகளை அணிகின்றார்களில்லை. அநேக ஆயிரக்கணக்கான வைசியர்கள், க்ஷத்திரியர்கள், பிராமணர்கள்கூட, பூணூல் தரிக்கின்றார்களில்லை. மேலான ஜாதிகளில் அநேகர் இப்போது சிகையை வைத்துக்கொள்ளுகின்றாரிலர். சிகையை வைத்துக் கொள்ளுமவரும், ஒரேவிதமாய் வைத்துகொள்ளுகின்றார் இல்லை. சிலர், சிகையைச் சிரசின் முன்னரும், சிலர் சிரசின் பின்னரும், சிலர் சிரசின் மத்தியிலும், இவ்விதம் பலவாறாக வைத்துக்கொண்டு வருகின்றார்கள். இவர்கள் எல்லாம் ஹிந்துக்களேயாவர்.

(2) நெற்றியில், பல வர்ணங்களான திலகம், ஊர்த்வ புண்ட்ரம், திரிபுண்ட்ரம்,நாமம் முதலியவைகளைப், பலவாறாக வைத்துக்கொள்ளுகின்றார்கள். சிலர் பாழ் நெற்றியுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள். இவ்வேற்றுமைகளிருந்தும் இவர்களும் ஹிந்துக்களேயாவர்.

(3) உடைகளிலும், ஆபரணங்களிலும், தரிக்கும் மாலைகளிலும் பலவாறான வித்யாசங்கள் உள்ளன. ருத்ராக்ஷமணிகள், துளசிமணிகள், தாமரை மணிகள், ஸ்படிகமணிகள், முத்துமணிகள், பவளமணிகள், தினுசு தினுசான நகைகள் இவைகளை அணிகின்றார்கள். இவ்வேற்றுமைகளாலும், ஹிந்து என்ற பெயர் விலகாது. நாநாவிதமான இவ்வேறுபாடுகள், அறிவில் பலதரத்தினராக உள்ள இந்த ஜனங்களுக்கு அவசியமானவைகளே. எல்லாம் துறந்த சந்நியாசிக்கு இவைகள் வேண்டுவன அல்லவாம். ஈசுவர சாக்ஷாத்காரம்பெற்ற அறிஞர்களுக்கு இவை வேண்டாவாம்.

மெய்யுணர்வுபெற்ற ஞாநிகள் இவைகளைத் தவிர்ப்பார். சிகை, சூத்திரம், மணிமாலை முதலியவைகள் ஆத்மஸம்வித் பெற்றவர்களுக்கு யாது பயன் படும்? இவர்கள் எல்லாம் ஹிந்துக்களேயாவர்.

(4) உணவு, பாநம், இவைகளைப்பற்றியும் ஒரேவிதமாய் யாவரையும் கட்டுப்படுத்தக்கூடிய விதிகள் இல்லை. தீண்டா ஜாதியார் எனப்படும் கீழான ஜாதியார்கள் ஹிந்துக்கள்தான் என்று சமீபத்தில், ஜநக்கணக்கு கமிஷனர் (Census Commissioner) சர்கிலர் வெளியிட்டதின்மேல், யாவராலும் அங்கீகரிக்கப்படுகின்றார்கள். இவர்கள் கோ மாமிசம், பன்றி மாமிசம் முதலியவைகளை உண்ணுகின்றார்கள். மீன் முதலியவைகளை உண்ணுகின்ற பிராமணர்களும் இருக்கின்றார்கள். சுராபாநம் சாதாரணமாய் எல்லா ஜாதியார்களும் செய்கின்றார்கள். முக்கியமாக வாமாசாரிகள் இதைப் பாநம் பண்ணுகின்றார்கள். சில தாந்திரிகர்களின் ஆசாரங்களைக் கவனிப்போமாகில், இனி அவர்களைவிடக் கீழ்க்கடையான ஆசாரமுள்ளவர்களும் உளரோ எனச் சந்தேகிக்கலாம்! இவர்களும் ஹிந்துக்களேயாவர்!

(5) இக்காலத்தில், இன்ன கிரியைகள் முக்கியமானவை, இன்ன ஸம்ஸ்காரங்கள் இன்றியமையாதவை என்று சொல்லமுடியாது. வேத சம்பந்தமான கிரியைகள், கீழான ஜாதிகளுக்கில்லை. மேலான ஜாதியார்களிலும் அநேகர் சுவேச்சையாக, அநேக ஸம்ஸ்காரங்களை விட்டுவிட்டார்கள் ஜநநம், விவாகம், மரணம் இவை சம்பந்தமான கிரியைகள் முடிவில்லாமல் பலவாறாக வேறுபடுகின்றன. தீண்டுதல், தீண்டாதல், சகபோஜநம், விவாக சம்பந்தமுண்மை, விவாகசம்பந்தமின்மை, இவைகள்தான், வர்ணங்களின் வெளிப்படையான அறிகுறிகளாம். இவைகளில் நாநாவிதமான வேற்றுமைகள் உள்ளன. ஒரு பிராமணன், முஸல்மானுடனும், கிறிஸ்துவனுடனும் கைகுலுக்குவான். தீண்டாத ஜாதியாருடன் அப்படிச் செய்யக் கூசுவான், செய்யான். பிராமணர்களிடத்திலிருந்து உணவை அங்கீகரியாத சூத்திரரும் உள்ளார். மேலான ஜாதியார்களில், கீழான ஜாதிகளின் பெண்களை விலைக்கு வாங்கி விவாகம் செய்கிறவர்களும் உண்டு. மஹாராஷ்டிரர்களுக்குள், தாயாதிகளுக்குள் விவாக சம்பந்தம் நேரிடும். நேபாளத்தில் மேலான ஜாதியார், மநுவை அநுசரித்தே, கீழான ஜாதிப்பெண்களை விவாகத்தில் அங்கீகரிக்கிறார்கள். ஔதிச்சிய பிராமணர்கள் என்ற ஒருவகுப்பார், ஒரேநாளில், அவ்வகுப்பில் உள்ள விவாகங்களை எல்லாம் அவ்வவ்வருஷங்களில் நடத்துவார்கள். ஜோதிஷ சாஸ்திர முறைப்படி அந்தந்த தம்பதிகளுக்குப் பொருத்தமான நாள் நக்ஷத்திரங்களின் எண்ணத்தையே அநேகர் துறந்துவிட்டார்கள். சிலர் அவைகளில் முக்கியமாக ஒவ்வொன்றையும் கவனிக்கிறார்கள். வேறு சிலர் இவைகளை அநாவசியமென முற்

னும் தவிர்த்துவிட்டார்கள். ஒருவன் பல ஸ்திரீகளை விவாகம் செய்வதும், ஒரே ஸ்திரீயை விவாகம் செய்வதும், மேல் வர்ணத்திலும் கீழ் வர்ணத்திலும் ஸகஜமாக இருக்கின்றன. சூத்திரர்களில் சில வகுப்பார், விவாகமான மேல், சம்பந்தத்தை அறுத்துவிடுகிறார்கள் (Divorce). அறுத்துவிட்ட ஸ்திரீயை வேறு ஒரு புருஷன் விவாகம் செய்துகொள்ளுகிறான். விதவா விவாகம் அவ்வகுப்பினர்களுக்குள் சாதாரணமாக இருக்கின்றது. புருஷன் சிறுவனாகவும், ஸ்திரீ இரண்டு மூன்று குழந்தைகள் பெற்றவளாகவும் இருந்தும், இவர்களுக்குள் விவாகம் நேரிடும் ஜாதிகள் மதுரை ஜில்லாத் திருமங்கலம் முதலிய இடங்களிலிருக்கின்றார்கள். மலையாளம் முதலிய இடங்களில் நடைபெறும் சம்பந்தங்கள் விவாகந்தானோ?

(6) ஜாட்டுஸ் என்ற ஜாதியாரும் சீக்கர்களும் வர்ணபேதங்களை விட்டுவிட்டார்கள். ஜங்கமர்களான லிங்கம் கட்டிகளுக்குள் ஜாதிபேதமில்லை. இறந்தமேல் அவர்களுடைய பிரேதங்களை எறிக்கிறார்களில்லை, புதைக்கின்றார்கள். சந்நியாசிப்பிணங்களைப் புதைக்கின்றார்கள், அல்லது ஓடும் ஜலத்தில் போடுகின்றார்கள். சிசுக்களின் பிணங்களையும் அவ்விதமே செய்கின்றார்கள். இவைகள் எல்லாம் சாஸ்திரீயமானவைகளாகவே அங்கீகரிக்கப்படுகின்றன.

(7) ஹிந்து தர்மசாஸ்திரத்தின் விவகாரகாண்ட விஷயமாக, வார்சுபாத்தியங்கள், சுவீகாரம், மரண சாசனம் ஏற்படுத்தல், முதலியவை தேசத்தின் பல பாகங்களில் பலவாறாக வேறுபடுகின்றன. இவ்விஷயங்களில் இந்தியாவின் வடமேற்கு மாகாணங்களும், வங்காளமும், கசந்தீவாரும், திருவாங்கூரும், கொச்சியும், இவைகள் முற்றும் ஒன்றொடொன்று வேறுபடுகின்றன. ஆகவே, விவகார காண்டத்திலும், பல இடங்களில் பலவாறான வேற்றுமைகள் இருக்கின்றன.

(8) ஜாதி, வர்ணம் என்ற பரீக்ஷைகளும், ஹிந்து யாவன் என்பதை நிர்ணயம் செய்யத், தவறுகின்றன. மஹா கறுப்புள்ளவன் முதற்கொண்டு மஹா வெளுப்புள்ளவன் ஈறாகப்பலவாறான வர்ணபேதங்கள் உள்ளவர்கள் இருக்கின்றார்கள். பரந்த முகத்தினர், குறுகிய முகத்தினர், அகன்ற சிரசினர், குவிந்த சிரசினர், நீண்ட தலையினர், இரட்டை மண்டையர், தட்டை மூக்கினர், நீண்ட மூக்கினர், கிளி மூக்கினர், நேர் மூக்கினர், உயர்ந்த மூக்கினர், பரந்த மூக்கினர், குறுகிய மூக்கினர், நெட்டையர், குட்டையர், சுருண்ட மயிரினர், செம்பட்டை மயிரினர், முரட்டு மயிரினர், பஞ்சு போன்ற மயிரினர், சிவப்பு மயிரினர், கறுப்பு மயிரில் பல சாயல் உள்ளவர்கள், இவர்கள் போன்ற பலவகை மனிதஜாதி பேதமுள்ளவர்கள் ஹிந்து என்ற நாமதேயத்தின்கண் அடங்குவார்கள்.

(9) பலதேசங்களில் இப்போது, ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் போய்க் குடியேறி இருக்கின்றார்கள். ஆபிரிகா, அமெரிக்கா, கானடா முதலான விடங்களில் ஹிந்துக்கள் இருக்கின்றார்கள். 10 லக்ஷம் ஹிந்துக்கள், பாலி (Bali) லாம்பாக்து (Lombok) தீவுகளில் இருக்கின்றார்கள். இத்தீவுகள் இந்தியாவினின்று 15 நாள் கப்பல் பிரயாணம்.

(B) உள்ளத்தின் விஷயமான அந்தர்முகப்பட்ட தர்மங்களைப் பற்றி ஆராய்வோமானாலும், ஹிந்துவின் முக்கியமான லக்ஷணங்களை வியக்தமாக அறிவித்தல் இயலாததாம். மநோபாவங்களின் எல்லாவிதமான அபிப்பிராயங்களும் ஹிந்து சமயம் என்பதில் அடங்கும். பிரதானமே முதற்காரணம் என்பர் சிலர், இந்திரியங்களின் செயலே எல்லாம் என்பர் சிலர், பிரகிருதி புருஷ மிதுநம் என்பர் சிலர், சைதந்நிய புருஷனே முதல்வன் என்பர் சிலர், அத்துவைதம் என்பர் சிலர், விசிஷ்டாத்துவைதம் என்பர் சிலர், நீக்கமற நிறைகின்ற சைதந்நியப் பொருள் என்பர் சிலர், ஆகமசைவம் என்பர் சிலர், வைதிக சைவம் என்பர் சிலர், சிலர் சாக்தர் என்பர், சிலர் ஸௌரர் என்பர், காணபத்தியர் என்பர் சிலர், சுப்பிரமணிய உபாஸகர் என்பர் சிலர், இவைபோன்ற பல வேறுபாடுகள் உள்ளன.

அடியில்வரும் தாயுமான சுவாமிகள் அருளிய பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது :—

“பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
பொறிபுல னடக்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
போனவிட மென்பர்சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
நாடிலரு வென்பர்சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்
பேசிலரு ளென்பர்சிலபேர்
பின்னுமுன்னுங் கெட்ட சூனியம தென்பர்சிலர்
பிறவுமே மொழிவரிவையாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
பரமசுக நிஷ்டைபெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரி பூர்ணனந்தமே.”—தாயுமானவர்.

6 வித ஆஸ்திக தர்சநங்களும் 6 வித நாஸ்திக தர்சநங்களும் இங்கு கவனிக்கத்தக்கன.

(1) நாஸ்திக தர்சநங்கள், கடவுள் உளர் என்று உபதேசிக்கிறது மாத்திரமல்லாமல், வேதத்தையும் மறுக்கின்றன. ஆஸ்திக தர்சநங்களில் அடங்கிய, சாங்கிய, பூர்வமீமாம்ஸை தர்சநங்கள் கூட உண்மையில், நிரீசுவர வாதத்தைச் சாதிக்கின்றன. நாஸ்திக தர்சநங்களில், சார்வாகர் ஆத்மா, புநர்ஜந்மம், கர்மம் முதலியவைகளை முற்றும் மறுப்பார். "பசிதீர உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமே" எல்லா ஞாநத்தின் முடிபு என்பார். வைஷ்ணவர்களில் சில வகுப்பினர், நித்திய ஸூரிகள் (நித்திய முக்தர்கள்) நித்திய நரகர்கள் (நித்திய பெத்தர்கள்) உள்ளார் என்றும், கர்மபலமே கிடையாது என்றும், எல்லாம் ஈசுவரன் அருள் பிரஸாதத்தால் கிடைக்குமென்றும் அபிப்பிராயப்படுவார்.

(2) விஸர்க(சிருஷ்டி) முறையில் பல படிகளிலுள்ள ஆத்மாக்கள், அவர் அவருக்கு எற்றபடி, ஞாந வழியில் பல அந்தஸ்துக்களை அவலம்பித்து நடைபெறவேண்டிப், பலவாறான தர்சந பேதங்கள் ஹிந்து சமய முறையில் எற்பட்டுள்ளன. ஒரு புத்தகசாலையிலும், ஒரு வித்யா சாலையிலும், அவர் அவர் விஞ்ஞாந பயிற்சிக்குத் தக்கவாறு பலவிதமான புத்தகங்களும், பலவிதமான துறைகளும் இருக்கின்றமைபோல, ஹிந்து சமயம் என்பது, பல சரக்குகள் உள்ள கடைபோன்றதாம். அவர் அவருக்கு வேண்டிய சாமான்கள் அதில் கிடைக்கும்.

(3) ஜைனர்கள் இப்போது ஹிந்துக்களாகக் கருதப்படுகின்றார்கள். வைஷ்ணவர்களுடன் விவாக சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வேதம், புராணம் இவைகளைப் பிரமாணமாகக் கொள்ளுகின்றார்களில்லை. பௌத்த மதம் இந்தியாவில் பிரபலமாய் நடைபெற்ற காலத்தில் அசோகருடையவும் அவர் சந்ததியாருடையவும் ராஜ்ஜிய பாரத்தில், ஹிந்து மதத்தினின்று பௌத்தமதத்திற்கும் பௌத்தமதத்தினின்று ஹிந்து மதத்திற்கும் சாதாரணமாய் ஜநங்கள் மாறி மாறிக்கொண்டு வந்தார்கள் ஹிந்துக்களில் மேல் ஜாதியார் என்னப்பட்டவர்கள், வேதத்தை நம்புதலும், அதைப் பிரமாணமாகக் கொள்ளுதலும் போலியாம். உண்மையில் அது அவர்கள் அநுஷ்டாநத்திலில்லை என்றபடி. கீழான ஜாதியார்கள் வேதத்தைப்பற்றிய நினைப்பையே ஒழித்தார்கள்.

4. மேற்கண்ட ஆராய்ச்சியால் நாம் பெறும் சித்தாந்தம் யாதெனில் ஹிந்து என்பவன் எவன் என்றால் (1) ஹிந்து என்பவன் தான் அல்லன் என எவன் சொல்லானோ அல்லது, தான் ஹிந்துவென்று எவன் வற்புறுத்திச்

சொல்லுவானே, அவன் ஹிந்து ஆவான். (2) மேற்கண்டபடி எந்தக் கொள்கையையும், எந்த ஆசாரத்தையும் அங்கீகரிப்பவன் ஹிந்து ஆவான்.

உற்று நோக்கில், ஹிந்து என்பது வெறுமையான பெயராகும்.

5. நீதிமுறை தர்மமுறைகள்,எல்லா மதங்களிலும், ஒரே மாதிரியானவை. எல்லா மதங்களின் கொள்கைகளும், ஸம்ஸ்காரங்களும் பொதுவான சில மூலதத்துவங்களை ஆதாரமாக உடையன. மற்றைய மதங்களைவிட அதிகமாக ஹிந்து மதத்தில் அநேக கொள்கைகளும், ஸம்ஸ்காரங்களும் பெருகி உள்ளன. மற்ற மதஸ்தர்கள், அந்தந்த மதக்கொள்கைகள் முதலியவைகளை அங்கீகரித்தாலும் அநுஷ்டித்தாலும் அந்தந்த மதஸ்தாபநாசாரியரை (கிறிஸ்து, புத்தர், மகமது, ஜோராஸ்துஷ்டிரர் முதலியாரை) அங்கீகரிக்காமல் மறுத்தார்களாகில், அம்மதஸ்தினராகார். அந்த மதஸ்தாபநாசாரியரை மாத்திரம் அங்கீகரித்து, அம்மதக்கொள்கைகளையும் ஆசாரங்களையும் முற்றும் தவிர்த்தாலும் அம்மதஸ்தர்களென்றே கருதப்படுவார். ரோமான் கத்தோலிக் கிறிஸ்துவர்களில் அநேகர் அவர் அவர்களின் பூர்வ ஜாதி ஆசாரங்களையும் அநுஷ்டானங்களையும் விடாமல் நடைபெறுவார்கள். நெற்றியில் பலவிதமான பொட்டுக்கள் போடுவதும், பூணூல் அணிவதும், ஹிந்துக்களுடைய பண்டிகைகளையும், விரதாதிகளையும், நோன்புகளையும் கொண்டாடுகிறார்கள். பெயரால் மாத்திரம் கிறிஸ்துவர்களாவார்.

6. அவ்விதமே ஹிந்து மதத்திற்கும் இருத்தற்பாலது. அறிவுடையார் அபிப்பிராயமும் அப்படி இருத்தலே நலமாம். ஹிந்து மதத்திற்கு வரம்பை ஏற்படுத்தி அதை வியக்தப்படுத்தும் முறையில்,ஆராய்ச்சி செல்லாதிருத்தல் நலமாம். முன்னாளில் இருந்தமைபோல, இன்னாளிலும், இனி வரும் நாளிலும் ஹிந்து மதம் எல்லாமையும், எல்லாச் சமய பேதங்களையும், எல்லா தர்சநங்களையும், எல்லா அபிப்பிராய பேதங்களையும், தன்னுடைய விசாலமான ஞாந பூமியில் உள்ளடக்கிக்கொண்டும், எல்லா அபிப்பிராய பேதங்களையும் பொறுமையுடன் பாராட்டியும், எல்லா வேற்றுமையான எண்ணங்களும் சமயங்களும் ஞாந மார்க்கத்தில் சோபாந முறையாக நடைபெறும்படி செய்தும், விரிந்து உலகமெங்கும் பரவி உலகத்தின்கண் சாஸ்திரீயமாயும் புத்தி யுக்திகளுக்கு ஒற்றுமையாயுமான ஒரே மத ஸம்பிரதாயமாக நடைபெறல் நலமன்றோ ?

7. மேலும் ஹிந்து மதத்தின் முக்கியமான கொள்கைகள்தான் எவை? அதன் முக்கியமான மூலாதாரமான தத்துவங்கள் எவை?

(1) வேதம் என்றால் என்ன? அறிவு, சாஸ்திரம், உண்மை, சத்தியம், குரு சிஷ்ய ஸம்பிரதாயமுறையில் கேட்கப்பட்டது (சுருதி). இக்காலத்

தில் வித்யாசாலைகளிற்போல் படிக்கப்பட்டதன்று. அது சநாதநம், என்று முள்ள சத்தியம். அபௌருஷேயம் சாதாரண மனிதரால் இயற்றப்பட்டதன்று. தெய்வீகமானது, எங்கும் என்றும் நிகழ்வது, யாவராலும் அங்கீகரிக்கப்படவேண்டுவது. ஒருவனால் சிருஷ்டிக்கப்பட்டதன்று. அப்போதைக்கப்போது, (ரிஷிகளின்) மெய்யுணர்வு பெற்றவர்களின் காக்ஷியில் புலப்பட்டது. கணிதம், ஜியாமிதி, தர்க்கம், ஜோதிஷ சாஸ்திரங்களின் உண்மைகளை யார் உண்டுபண்ணினார்கள்? யாவரும் இலர். அவைகளை அறிஞர்கள் திவ்விய திருஷ்டியால் தெரிந்து வெளியிட்டார்கள். வேதம் அவை போன்றதாம்.

(2) ஸ்மிருதி என்றால் என்ன? முன் கேட்கப்பட்ட வேதத்தில் உள்ள உண்மைகள் ரிஷிகளால் ஞாபகத்திற்குக் கொண்டுவரப்பட்டுக் காலத்திற்கு ஏற்ப உலகில் நித்திய அநுஷ்டானார்த்தமாக ஏற்படுத்தியது அன்றோ? இக்காலத்தில் சட்டநிர்மாண சபையாரும் இத்தொழிலைத்தான் செய்கின்றனரன்றோ?

(3) புராண இதிஹாசம் என்பவைகள் பூர்வசரித்திரங்களாம். மந்திரிகளும் உலகத்தை நடத்தும் அறிஞர்களும் மனிதர்களுக்குள் முன்நிகழ்ந்த சம்பவங்களை ஆராய்ந்து அறிந்து தெளிந்து, இக்காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி உலகமுறையை நலம்பெற நடப்பிக்கவேண்டும் என்பதை இவைகள் உபதேசிக்கின்றன.

(4) வேதாங்கங்கள் வேத உபாங்கங்கள் எல்லாம் வித்தைகளாம். வேதத்தின் அங்கங்களாம். அதன் பலகிளைகள், பிரிவுகள் நம் உலகின் இயற்கை தர்மங்களையும், உண்மைகளையும் வியக்தப்படுத்தும் நூல்களாம்.

(5) ஆசிரமதர்மம் நேர்மைப்பட்டிருக்கிற மனிதனின் ஒழுக்கமுறை. இக்காலத்திலும் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மனிதனும் தனாயுள் நாளை வகுத்து முறைப்படுத்தல் நலம் எனக்கருதப்படுகின்றது. கல்விகற்கும்காலம்(பிரஹ்மசரியம்),இல்வாழ்க்கை நடத்தும்காலம்(கிருகஸ்தாசிரமம்), உலகத்திற்குப் பொது நலம் உண்டாக்கும் காலம் (வானபிரஸ்த ஆசிரமம்), துறவு மறுஉலகம் நோக்கும் காலம் (சந்நியாஸம்) என்பனவாம்.

(6) வர்ணதர்மம் என்பது உலகத்தில் உள்ள பல வர்ணங்களான மனிதவர்க்கத்தினரை (வெள்ளையர், சிவப்பர், மஞ்சள்வர்ணத்தார், கறுத்தவர், முதலியவர்களை) ஒரே குலமாக ஏற்படுத்தியும், ஒரே விராட்புருஷனாக அமைத்தும், அப்புருஷனின் பல அங்கங்களாக,உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தினரை மதித்தும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் நேர்மையாக சம்பந்திக்கும் விவஸ்தையை ஏற்படுத்தலாம். இக்காலத்தில் நாகரீகம் பெற்ற ஒவ்

வொரு தேசத்திலும் சிலர் பிராஹ்மணதர்மங்களையும், சிலர் க்ஷத்திரியதர்மங்களையும், சிலர் வைசியதர்மங்களையும், சிலர் சூத்திரதர்மங்களையும், அநுஷ்டிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்குப் பெயர் மாத்திரம் வேறு. மேலும் அவர்கள் அநுஷ்டானம், நம் தேசத்தைப்போலக் கொடுமையான கட்டுப்பாட்டுக்குட்படாமல் ஸரஸமாகவும் ஈளிகமாகவும், நிகழ்கின்றது.

(7) இத்தன்மையாயுள்ள ஹிந்து மதத்தின் கொள்கைகளை உணர்ந்தோமானால், நம்முடைய ஹிந்து மதம் எங்கும் பரவவும், என்றும் நிலைநிற்கவும் ஏதுவாகும். அப்போதுதான், அது புத்தி யுக்தியநுபவங்களுக்குப் பொருத்தமான சாஸ்திரீயமான மதமாக அமையும். இப்போது சொல்லியுள்ள கொள்கைகளை, உலகத்திலுள்ள உண்மையான எந்த மதமும் தவிர்க்காது. ஏனையமதங்களில், ஒரு ஸம்ஸ்காரத்தினால் ஒரு தினத்தில் ஒரு க்ஷணத்தில்ஒருவனை ஒரு மதத்தினின்று வேறு மதத்திற்குப் பெயர்த்திடுவர். பெயரை மாத்திரம் மாற்றுவர். ஹிந்து என்ற பெயர் போய் கிறிஸ்துவன், மகமதியன் என்ற பெயர்வரும். ஆனால் முன்னுள்ளவனே இந்த நூதநப்பெயர் பெற்றவனும். பழைய சுப்பனேயாம். ஹிந்துமதத்திலோ அப்படிச் செய்தல் இயலாது. அது பயனற்றதென்று கருதப்படும். அநேக வருஷங்களில், அநேக தலைமுறைகளில், அநேக ஜந்மாந்தரங்களில், பிறந்து பல ஸம்ஸ்காரங்கள் பெற்று அதன்மேல் ஒருவன் மேலான நிலையைப்பெறவேண்டும். அப்போதுதான், அத்தகைய அபிவிருத்தி தான், சாவதாநமாகவும் ஸ்திரமாகவும் இருப்பதாகும். இக்காரணம்பற்றித்தான், 4 வர்ணத்திற்குள், உள்ளான அநேக சிறு வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் சில உள்வகுப்புக்கள், அகங்காரம் இறுமாப்பு முதலான தீய எண்ணங்களின் காரணமாக உண்டாகியும் இருக்கின்றன. சமர்த்தனான வியாபாரி, ஒரு நாளில், ஒரு நிமிஷத்தில், ஒரு ஸம்ஸ்கார முறையால், யுத்தவீரனாகவும், அல்லது ஞாநசம்பந்நனாகவும், மாறி ஆதல் கூடுமோ? கூடாது.

(8) சுருங்கச்சொல்லுமிடத்து, இதுதான் மநுவின் தாத்பரியம்; உலகில் உள்ள எல்லா ஜநங்களும் நாலுவர்ணத்தின் யாதேனும் ஒருவர்ணத்தில் அடங்குவார்கள். 5-ம் வர்ணம் என்பது இன்றும். ஹிந்துமதத்தை நியாயமாகவும், அறிவுடனேயும் ஆராய்வோமாகில், ஹிந்துமதஸம்பிரதாயம் (Organisation) உலகமெங்கும் பரவி, எல்லா ஜநங்களையும் தழுவி நடைபெறும் தன்மையது; இம்மை மறுமை இரண்டுக்கும் பயன் அளிக்கக்கூடியதாகவும், பிரதி மனிதனும் தான் பூர்ணசுதந்தரம் பெறும்படியாயும், ஆத்மஸம்வித் அடையும்படியாயும், ஜநஸமூகத்தில் நேர்மையும் நலமும் உண்டு பண்ணும் இயல்பினதாகவும், இருக்கின்றது என்பதை அறியலாம். இவ்விதமின்றி, வேற்றுமைப்பாடுகளை வற்புறுத்தியும், அதன் பெருமையைக் கெடு

த்து அதைக் குறுகிய வரம்புக்குட்படுத்தியும், அதனால் அதைச் சிறுமைப் படுத்தியும், நாம் அதைச் செய்வோமாகில், நாளடைவில் அது சீர்கெட்டு, உயிர்போன பிணம்போல் ஆகிவிடும். பலவாறான, வேற்றுமைகள் காரணமாக ஒன்றோடொன்று போராடும். இன்னும் பலவாறான பிரிவுகளானகிருமிகளும் புழுக்களும் உண்டாகி, அழுகிக்கொண்டிருக்கும் பிணத்தைத் தின்னும் முறையில் பல போராட்டங்கள் ஏற்பட, அவைகளும் மடியும். உண்மையாக, உள்ளபடி நோக்குமிடத்து, ஹிந்துமதம் என்பது எல்லா மதங்களும் தன்னுள் அடங்கப்பெறும் தகைமையை உடையது. அதனால் தான் மற்றைய மதங்களினின்று அதை வேறுபடுத்தி, இதுதான், இதுவரையில்தான், ஹிந்து மதம் என வியக்தப்படுத்தல் இயலாதாம். அப்படி வியக்தப்படுத்த வேண்டுமாகில், ஹிந்து என மாத்திரம் சொல்லற்பாலது. தன்னை ஹிந்துவாக நம்பி, ஹிந்து எனத் தன்னைச் சொல்லுகிறவன், ஹிந்துவாவான். அதை மறுக்கும் திறமை ஒருவனுக்குமின்றும்.

ப. நா.

## நன்மொழி.

---

114. திதிக்ஷை என்றால் சகித்தல், முக்கியமாய்க் கஷ்டங்களைச் சகித்தல். தர்மவிதியின் உண்மையை நன்றாய் அறிந்துள்ளவன் சுக துக்கங்களின் சம்பவம் முன்வினைப்பயன் என உணர்ந்து, பொறுமையுடன் 'வருவன எல்லாம் வருக' என்று இருக்கும் சித்தத்தின் தெளிவே திதிக்ஷையெனப்படும். அவன் சுகம் வந்தால் உற்சாகம் கொள்ளான், துக்கம் வந்தால் மனச்சோர்வு அடையான்; மனம் தளரான், நேர்வழியாகிய குருசரணாரவிந்தமே நோக்குவான். ஆகையால், அவ்வழிவிட்டுவிலகான், அந்நெறியில் செல்லுகையில், எவ்வித இடையூறுகள் எதிர்ப்பட்டாலும், எவ்வித விஷய சுகங்கள் சம்பவித்தாலும், எவர் பழித்தாலும், எவர் புகழ்ந்தாலும், அவன் மனம் அவைகளை நாடித்திரும்பாது. இப்படி ஒரே பிடியாய், குருவே கதியென ஒரே லக்ஷியமாகச் செல்லுவதில் பலசோதனைகள் நேரிடும். பாழ்போலக் காணும். வீணாய் அலைகிறோமே, ஒன்றையும் காணோமே, சுகவழியாகிய பிரவிர்த்தி மார்க்கத்தில் திரும்புவோமே, என்று இவ்வித சோதனையான சந்தேகங்கள் மனத்தில் எழும். இவைகளைத் தள்ளிவிட்டு நடைபெறுகிறவனே தீரன்.

## ஸந்மார்க்க முறையும், ஸம்ஸாரியும்.

[குறிப்பு:—லண்டன் பட்டணத்தில் City Temple என்று பெயருள்ள நகர ஆலயத்தின்கண் 1907ஸ்ரீ அக்டோபர்மீ 10ஷ, மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார்செய்த உபந்நியாசமிது. ஸ்ரீமான் ஆர். ஜெ. காம்பெல் என்பார் அச்சமயம் அக்கிராஸநம் வகித்தார். அம்மையாரைப்பற்றி அவர் செய்த முகவுரையாவது:—"இச்சபையாருக்கு இந்த அம்மையார் இன்னாரெனப் பரிச்சியம் செய்விக்கும் முறையில், அவர்களைப்பற்றிய வரலாற்றைப் புகழ்படச் சொல்வதில் அவர்கள் சங்கோசமாய் நினைக்கக்கூடிய விஷயங்களைப் பிரஸ்தாபிக்க நான் விரும்புகின்றேனல்லேன். ஆயினும் இவ்வுலகத்தில் இக்காலத்தில் நீதி தர்மமுறைகள் பயக்கும் உயர்வற உயர்நலமுள்ள கம்பீரமான சாதநங்களில் அம்மையார் ஒருவராவர் என நான் சொல்லாமல் விடுதல் கூடாத காரியம். அப்படிச் சொன்னால்தான் நம் கடமையை நிறைவேற்றியவராவோம். பிரிட்டிஷ் ஜநங்களாலும், உலகமெங்குமுள்ள ஆயிரக்கணக்கான அறிஞர்களாலும், அவர்கள் நன்குமதிக்கப் பெறுகின்றார்கள் என்பது சரியே. இதற்குமுன், சத்தியமென்று அவர் நினைத்ததை நாடி நடைபெறுமுறையில் அவர் பட்ட கஷ்டமும் அதனால் உண்டான தியாகமும் அதிகமானவை. ஆயினும், அவர் மநம் அவைகளால் கிலேசப்படாமலும், பிறர் செய்த கொடுமையை நினைத்து வருந்தாமலும் அவர் இருந்திருப்பது மிகவும் ஆச்சரியமான விஷயம். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவர்க்கு ஒரு விஷயத்தைப் பற்றி நிகழும் அபிப்பிராயம் தீவிரமாகவும் உறுதியாகவும் உளதோ, அவ்வளவுக்கவ்வளவு பிறர்க்கு அதைப்பற்றித் துவேஷமும் பொருமையும் அதிகமாக இருக்கற்பாலதன்றோ! ஆயினும் உலகில் அம்மையாருடைய ஒழுக்கமுறையில் சிறப்பாய் எடுத்துப் பிரஸ்தாபிக்கக் கூடியது யாதெனில், பிறர்பால் அம்மையார் யாதொரு மநவருத்தமும் மநக்கிலேசமும் கொள்ளாமல் எப்போதும் சாந்தமும் பொறுமையும் பாராட்டியிருத்தல் என்பதேயாம். பலவாறான பிறர் கொள்கைகளில் அந்த அம்மை உண்மையையே நாடுவார். ஒரு கொள்கையையும் தள்ளிவிடார். அவருடைய உலக வாழ்வின் அநுபவம் அகன்றும் ஆழ்ந்துமிருந்தது. அதனால் அவர் உயர்நலம் அமைந்த ஞாநகுருவென மதிக்கப் பெறுகின்றார். அத்தன்மையராக அவர்களின் நல்வரவை நாம் பிரியத்துடன் இப்போது எற்கிறோம்."]

### அந்நிபெஸண்டு அம்மையார் உபந்நியாசம்.

1. முகவுரை:—நான் உத்தேசித்த விஷயத்தை உரைக்குமுன், தங்கள் முன்னர் நான் நிற்கும்படி நேரிட்டதைப்பற்றியும் என்னுடைய உபந்நியாச விஷயத்தின் அபிப்பிராய பேதங்களைப் பற்றியும் முகவுரையாகச் சில வார்த்தைகள் சொல்லவேண்டியவ

ளாக இருக்கின்றேன். இவ்விடத்தில் நான் நின்று உரையாடுவதற்கு அநுமதி செய்த உங்களுடைய புரோஹிதருக்கும் உங்களுக்கும் வந்தநம் அளிக்கின்றேன். நான் பிரஸ்தாபிக்கப்போகும் அபிப்பிராயங்கள் இந்த ஸ்தாநத்திற்காவது, இந்த ஸ்தாநத்தினின்று வழக்கமாய் உபந்நியஸிக்கும் புரோஹிதர்க்காவது யாதொரு பாதகத்தையும் உண்டுபண்ணக்கூடியதன்று என்பதை நான் முதன்மையில் வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்நகர ஆலயத்தை நடத்துகிற புரோஹிதர், இப்போது வெளியில் உலாவி வருகின்ற கொள்கைகளைக் கற்று, அறிஞர்களுடைய பிரயோஜநார்த்தமாக, தைரியமாய் வெளியிடுகின்றார். அவ்விதம் சிலர்தான் வெளியிடத் தைரியமுடையவராவர். அவ்விதம் அவர்கள் செய்துகொண்டு வருதலுக்கு நாம் எல்லாரும் நன்றிபாராட்டக்கடவோம். ஒரு உண்மையானது வெளியில் உலாவுமாகில் அதை வசநித்தலே ஜநங்களுக்குச் செய்யும் உயர்வான கைங்கரியமாம். உண்மை என்பது, அதை உள்ளபடி உணர்ந்து தைரியமாய் வெளியிடுகிறவரின் வாய்ப் பிறப்பைப் பெரும்பாலும் பொருத்ததாகவிருக்கிறது. அநேகர் உண்மை என்று தெரிந்ததை வெளியிட அஞ்சுவர். பிறர், வெளியிடின் ஆதரவுடனே அங்கீகரிப்பர். அப்படி வெளியிடும் தைரியம் சிலரிடம்தான் உண்டு. அதனால் நான் இவ்விடமிருந்து வசநிக்கும் கொள்கைகள் இந்த ஸ்தாநத்தினின்று வழக்கமாய் வெளிப்பட்டுவரும் அபிப்பிராயத்துக்கு எவ்விதத்திலும் யாதொரு கெடுதலையும் செய்யாமல் இருக்கவேண்டுவன என்பது என்னுடைய முக்கியமான கோரிக்கையாம். என் கொள்கைகள் என்னுடையனவேயாம். உங்கள் கொள்கைகளும் உங்களுடையனவேயாம். நான் கண்டு அறிந்த உண்மையை இன்று இரவில் வசநித்தல், அதை முன் அறியாதார் அங்கீகரிக்க வேண்டுமென்ற கருத்துடனன்று. என் வாய்ப் பிறப்பு எவ்வாற்றானும், (காம்பல் என்பவரைப்பார்த்து) உம்முடைய உத்தரவாதத்தின் பளுவை அதிகப்படுத்தாமலிருக்கவேண்டுவது என்பதே என் கோரிக்கையாம்.

2. ஞாநமுறை ஒரு இடத்தைப் பற்றியதன்று:— சிரத்தையுள்ள அறிஞர்களுங்கூட முறையிடுவதாவது, உலகவாழ்க்கை நிலையில்

ஆன்மமுறையான ஸன்மார்க்கத்தைத் தாங்கள் அநுஷ்டித்தல் கூடாமையாயிருக்கிறது என்பது. "இப்போது இருக்கின்ற என் நிலைமையானது வேறாக இருந்தால், எவ்வளவோ நன்மையான காரியம் முடிப்பேன். இப்போது இருக்கிற வேலை, அதனால் உண்டாகும் கவலை, மநக்கிலேசம், உலகப்பற்றுக்கள் இவை இல்லாமற் போனால், இப்போதைவிட அதிககாலம் ஸன்மார்க்கத்தில் கழிப்பேன்." என்னும் இக்கொள்கை சரியன்று. வெளியிலுள்ள விஷயங்கள், ஒருவன் நல்வழியில் ஒழுகும் இயல்பை உண்டாக்கவும் அழிக்கவும் இயலாவாம். ஸன்மார்க்கம் என்பது இடத்தையும் நிலைமையையும் பொருத்ததன்று. அது, உலக விஷயங்களைப்பற்றி அவனவன் கொள்ளும் மநோநிலையைப் பொருத்தது. ஆத்மா, உலகத்தில் ஆழ்ந்து அதன் வாழ்வில் வசப்படாமல், ஆத்மாவுக்குரிய கைங்கரியத்திற்காக உலகவாழ்வை எவ்விதம் மாற்றுவது என்பதைப்பற்றிய முறையை இன்று இரவு தங்களுக்கு அறிவிப்பேன். லௌகிக முறைக்கும் ஸன்மார்க்கமுறைக்கும் உள்ள சம்பந்தத்தை அறியாமல் ஒன்று மற்றொன்றுடன் முரணுகிறதென்று நினைத்து, அவ்விரண்டையும் பிரித்தால், அதாவது லௌகிக முறை ஒரு பக்கமும், ஸன்மார்க்கமுறை அதற்கு வைரியாக மற்றொரு பக்கமும் வைத்து எண்ணினாலும் பேசினாலும், அப்போது லௌகிக சம்பந்தமான தொழில்களின் அவசரமும் ஆத்திரமும் அந்தந்தத்தொழில்களுக்குரியபடி ஏற்படும் படபடப்பும் லௌகிக ஆசைகளின் என்றுமுள்ள பகட்டும், அவைகளாலுண்டாகும் கிலேசங்களும் கவலைகளும் ஸன்மார்க்கமுறையை அநுசரித்த உலகவாழ்வு நலமல்லவென்றும், உபயோகமற்றதென்றும் நம்மை நினைக்கும்படியாகச்செய்யும். உலக விஷயங்களைப்பற்றிய நெறிதான் உண்மையான நெறியென்றும் நமக்குத் தோன்றும். அதனால் இவ்வபிப்பிராயத்தை மாற்றுகிறதற்கு ரஸவாத முறையில் போல ஒரு குரு வேண்டும், ஒரு உபாயம் தேடல்வேண்டும். அப்போது தான் உலகவாழ்வு அநித்தியமென்றும் உண்மையல்லவென்றும் ஆத்மசம்பந்தப்பட்டவாழ்வில், அதாவது ஸன்மார்க்கமுறையில் அநித்தியமென்றும் உண்மை யல்லவென்றும் தெரியவரும். அவ்வித் உபாயத்தை அறிந்து அநுஷ்டிப்போமாகில் லௌகிகமுறை மூலமாகவே ஆத்மமுறையான ஸன்மார்க்க முறை ஏற்படுதல் கூடும்.

லௌகிகவாழ்வே ஸந்மார்க்கத்தை வெளிப்படுத்தும் சாதநமாகவும் அமையும். அதை மறைக்கும் தன்மையதாக ஏற்படாது. அதை வெளியிடுவதைத் தடுக்கவும் மாட்டாது. இன்றிரவு அவ்வுபாயத்தைக் கண்டுபிடிப்போம்.

3. ஸந்மார்க்கமும் உலக மார்க்கமும்:—உலகத்திலிருந்துகொண்டே ஒருவன் ஸந்மார்க்கமுறையை அநுஷ்டித்தல் கூடுமாவென்றவினா முன் காலத்தில் பலமுறை ஏற்பட்டு அது முடியாதென்றே விடைகொடுக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மதத்திலும், ஒவ்வொரு காலத்திலும், சரித்திரவாயிலாக நான் தெரிந்து கொண்டவரையில், இக்கேள்வி கேட்கப்படும் காலமெல்லாம் "இல்லை" யென்றே மறுமொழி ஏற்பட்டிருக்கிறது. அதாவது லௌகிகன் ஸந்மார்க்க முறைபற்றி ஒழுகவொண்ணாது." எகிப்து தேசத்தின் பாலைவனங்களிலும் இந்தியாதேசத்தின் வநங்களிலும், ரோமன்காதலிக் நாடுகளிலும், சந்நியாசிமடங்களிலும், கன்னியாமடங்களிலும் இவ்வாறு ஜநக்கூட்டத்தைத் தவிர்த்து ஏகாந்தங்கொண்டு ஈசுவரனை சாக்ஷாத்கரி என்ற மறுமொழிதான் ஏற்பட்டிருக்கிறது. இறைவன் ஞானத்திற்கும் ஸந்மார்க்கமுறையில் நடைபெறுவதற்கும், ஜநக்கூட்டங்களினின்று ஓடவேண்டுமென்பது அவசியமென்றால் நம்மவரில் பெரும்பாலர்க்கு ஸந்மார்க்கமுறை முடியாத காரியமென்று ஏற்படும். ஏனென்றால், நாமோ உலகத்தை முற்றும் விடவும் முடியாதவர்கள். உலகதர்மத்தை நமக்கு வேண்டியபடி இணக்கிக்கொள்ள இயலாதவர்களாகவு மிருக்கின்றோம். இவ்விஷயத்தில் நான் தங்களுக்குத் தெரிவிக்கிறது யாதெனில், இது முற்றும் தவறான அபிப்பிராயம்; இவ்வெண்ணம் சரியன்று; இவ்வபிப்பிராயம் இக்காலத்தில் அதிகமாக விருத்தியடைந்து பரவிக்கொண்டிருக்கிறதை நான் அறிவேன்.

(இன்னும் வரும்.)

ப. நா.

## புத்தகவரவு.

ஸமஸன் நாடகம்.—ஆங்கிலத்தில் மில்டன் என்ற கவிராஜன் Samson Agonistes என்று பெயருள்ள நாடகத்தை அருளியிருக்கின்றார். அதைக் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் முதல் உதவி உபாத்தியாயர் மகா-ஆ-ஸ்ரீ கெ. வெங்கட்டராம அய்யர் B. A. அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இதன் தமிழ்நடை மிகவும் அழகாய், லகுவாய் அமைந்துள்ளது, மொழிபெயர்ப்பு என்று தோன்றவில்லை. சொல்நலம் நேர்த்தியாக உள்ளது நம் மாணவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடியது. தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த வித்வானாகவிருந்து இப்போது காலம் சென்றுபோன ராவ் பகதூர் சாதுசேஷ அய்யர் அவர்களுடைய ஞாபகச்சின்னமாக இஃது அவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பெற்றுள்ளது. இத்தகைய புத்தகங்களை மகா-ஆ-ஆ-ஸ்ரீ வெங்கட்டராம அய்யர் அவர்கள் அதிகமாக வெளியிடுவார்களாக.

## சமாசாரம்.

மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தி அவர்களின் நன்கொடையும் ஆஞ்ஞையும்:—(1) நாளிது டிசம்பர்மீ 12௳ முதல், டில்லிமாநகரம், இந்தியா தேசத்திற்குப் பிரதான நகரமாகக் கடவது. புதிய நகர சங்க ஸ்தாபனம் நாளிது மீ 15௳யில் சக்கரவர்த்தி அவர்களே செய்துள்ளார். (2) வங்காள ராஜதானியானது, அதன் ஜனங்களின் மனோரதப்படியே ஒரேகவர்னருடைய ஆளுகைக்குள் அமைந்து நடைபெறவேண்டும். அதன் கண்ணுள்ள பேகார், சோடா நாகப்பூர், ஒரிஸ்ஸா இவை மூன்றும் லேப்டி நேண்டு கவர்னர் ஆளுகையில் அமைவுறும். அஸாம் நாடு பிரத்தியேகப்படுத்தப்பட்டு கமிஷனரின் விசாரணையில் ஏற்படும். இவை வங்காளிகளுக்கு மிகவும் திருப்திகரமான தீர்மானம். (3) இந்தியா தேசத்தின் கீழ்தரப்படிப்பின் அபிவிருத்தியை உத்தேசித்து 50 லக்ஷ ரூ முதன்மையாகக்கொடுக்கும்படி உத்தரவு அளித்திருக்கிறார்கள். இனி வருஷாவருஷம் இது விஷயமாக இராஜாங்கத்தில் நன்கொடையை எதிர்பார்க்கலாம். (4) மற்ற விஷயங்கள் பல சில்லறையானவைகள்.

சூரியனைக்கொண்டு ஜலம் இறைத்தல்:—நிலக்கரி மரக்கரி, விறகு முதலியவைகளை எரித்து நீராவியை உண்டுபண்ணி அதன் மூலமாய் (Pumping) ஜலம் இறைக்கும் யந்திரம் வேலை செய்கின்றது. அமெரிக்கா தேசத்தில் சூரியகிரணங்களைக் கண்ணாடிகள் மூலமாய்ச் சலீகரித்து அதிக உஷ்ணத்தை யுண்டுபண்ணி அதன் மூலமாய் நீராவியை யுண்டுபண்ணி அந்நீராவியால் ஜலம் இறைக்கும் யந்திரங்கள் முதலானவைகள் வேலை செய்யும்படியாக ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். நமது தேசத்தில் மேகத்தால் மூடப்பட்ட காலம் சொற்பமாயிருப்பதால் சூரியகிரணங்களை இவ்வியந்திரத்

தின் உபாயத்தால் சுவீகரித்துத் தொழிற்படும்படி செய்யலாம். எகிப்து தேசத்தில் இவ்வியந்திரத்தை வரவழைத்துப் பரீட்சை செய்கின்றார்களாம். நம் தேசத்தில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரும் சிற்றரசர்களும் ஜமீந்தார்களும் இத்தகைய யந்திரங்களை உபயோகித்து ஜனங்களுக்குக் கற்பிப்பார்களென நம்புகின்றோம்.

**நிலத்தின் வலிமையையும் வளமையையும் விருத்திபண்ணும் முறை.**—விவசாயத்தொழில் செய்யப்படும் நிலங்களுக்கு பாஸ்பரஸ் என்ற சத்தும் நைட்ரோஜன் என்ற சத்தும் கெந்தகம் என்ற சத்தும் முக்கியமானவை எனக் கிருஷி சாஸ்திர விற்பன்னர்கள் பலபரீக்ஷைகளின் மூலமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். நெடுநாள் சாகுபடி செய்யப்பட்டு வரும் வயல்களில் இக்குறைகள் நன்றாய்த் தெரியவரும். இக்காரணத்தால் தான் பயிர்கள் வளர்ந்து செழிப்பாயிருந்தாலும், சிலசமயங்களில் சரியானபடி வித்து உண்டாகாததினால் பொலிகாணவில்லை யென்கிறார்கள். அதற்குக் காரணம், இந்த சத்துக்கள், பயிரிடும் நிலங்களிலில்லாத குறையாம். இதை நிவிர்த்தி பண்ணுதலுக்கு பாஸ்பரஸ் என்ற சத்துள்ள மனித மாட்டு எலும்புகளைப் பக்குவப்படுத்தி உரமாகவும், அவுரி கொளிஞ்சி முதலான நைட்ரோஜன் சத்துள்ள குழைகளை உரமாகவும், கந்தக சத்துள்ள எருக்களை உரமாகவும் உபயோகித்தல் நலம்.

நம்தேசத்திலிருந்து எலும்பு உரத்திற்காகவே அந்நிய தேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதிசெய்யப்பட்டு வருகிறது, அதனால் பாஸ்பரஸ் என்ற சத்தானது நமது தேசத்தில் குறைவுபட்டுவருகிறது. விவசாயிகள் இவ்வுரத்தினுடைய பிரயோஜனத்தினுண்மையைத் தெரிந்துகொண்டு லாபம் பெறவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

அமெரிக்கா தேசத்துக் குபேரர்களில் ஒருவரான ஆண்ட்ருகார்னிகி என்பார் தம் தேசத்திலும் பிரிட்டனிலும் 2,200 புத்தகசாலைகள்(Libraries) ஸ்தாபித்திருக்கிறார். நமது தேசத்திலும் பரோடா மகாராஜா அவர்கள் புத்தகசாலைகளின் பிரயோஜனத்தை நன்குணர்ந்தவராய்த் தமது நாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் புத்தகசாலைகள் வைப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உலகமெங்கும் யாத்திரைசெய்து அறிவு அகன்றதினால் பிரஜைகளின் க்ஷேமத்தைக் கருதியவராய் இத்தன்மையான நல்ல காரியத்தை யாரொருவர் கேட்காமலும் தாமேசுயமாகச் செய்திருக்கிறார். மைசூர் ராஜாங்கத்திலும் இவ்விதம் செய்யப்படவேண்டுமெனப் பலர் முறையிட்டும் இன்னும் ஏற்படவில்லை.

**ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களின் மரணம்:**—பாலவநத்தம் வகையரா ஜமீந்தாரும், இக்காலத்திய தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அதன் அக்கிராஸநாதிபதியானவருமான பாண்டித்துரைத்தேவரவர்கள் மூளையில் ரத்தம் ஏற்றத்தினாலே மூன்று தினம் காயலாக இருந்து காளிதுமீ 2உ சனிக்கிழமை பகல் 11 மணிக்குச் சிவலோகமடைந்தார். அவர் மரணம் மிகவும் துக்ககரமானது. அவர்களுக்கு, மரணகாலத்தில் சுமார் 43 அல்லது 44 வயதுதான். தமிழ்ப்பாஷையில் மிகச் சிறந்த வித்துவான். அப்பாஷையின் பொருட்டு அவர் தம் ஆயுளையும் பொருளையும் தியாகம் செய்தவர். தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கமென்ற உயர் நலமமைந்த சபையை ஸ்தாபித்து அழியாப் புகழுடம்பைப்பெற்ற புண்ணியர் இவர். பலரும் பிரியப்படும்படியாகவும், யாவரும் அறியும்படியாகவும் அழகாயும் தெளிவாயும் இனிய மெல்லிய குரலுடனும் பிரஸங்கஞ் செய்யும் திறமையுடையவர். தமிழ் நாடுகளில் இவர்கள் பிரஸங்கத்தைக்கேட்டு ஆநந்திக்காதவர் இலர். எப்போதும் வித்துவான்களுடைய சங்கத்திலேயே காலத்தைக் கழிப்பார். எப்போதும் இன்சொல் பேசும் இயல்பினர். தாக்ஷண்யமும் பரோபகாரமும் எப்போதும் நிரம்ப உடையவர். அரிய தமிழ் நூல்களைப் பிரவித்தம் செய்கிறவர்களுக்குத் தங்கு தடையின்றி உதவி புரிந்து வந்தனர். இவர் நற்குணமும் நற்செயலும், இன்சொல்லும் ஏராளமான சிநேகிதர்களை உண்டுபண்ணியிருக்கின்றன. இவர் உண்மையான சிவ பக்தர். ஆனால் பிறர் மதத்துவேஷியல்லர். பிரஹ்மஞாந சபையின் ஒரு அங்கத்தினராகவும் இருந்தனர். கம்ப ராமாயணத்தில் அவருக்கிருந்த பிரியம் அளவு கடந்தது. அதன் பாசுரங்களின் அருமையையும் பெருமையையும் பற்றி வெகு அழகாய் உபந்நியஸிப்பார். தமிழ்ப் பாஷைக்கு வெகுவாய் இக்காலசதில் மிகவும் ஆதரவு செய்தவர் இவரைத்தவிர யாரும் இலர். செந்தமிழ்ப் பத்திரிகையை ஸ்தாபித்தார். பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி இந்நூற்களைத் தொகுத்து அச்சிட்டு வெளிப்படுத்தினர். இன்னும் சில காலம் இருப்பாரேயாகில் தமிழ்ப்பாஷைக்கு எத்துணையோ நற்காரியங்கள் செய்வார். அவர் ஸ்தாநத்தைப் பெறுதலுக்குத் தமிழ் நாட்டில் வேறொருவரும் இல்லையே என மநம் வருந்தித் தயங்குகின்றது. இவர் போன்ற மனிதரும் இனி உலகில் வருவரோவென்று வினவுகின்றது. ஆயினும் தமிழ்ப் பாஷையை நலப்படுத்திச் சிரேயஸ் உள்ளதாகச் செய்யவேண்டுமென்ற அவா உயிர் நீங்கும் வரை அவர் மநத்தில் குடிகொண்டிருந்தமையால், தாமெடுத்த அப்பெரும் கைங்கரியம் நிறைவேறும் வண்ணம், ஸ்வர்க்கலோக வாழ்வும் துச்சமெனத்துறந்து, சீக்கிரம் மானுட சரீரமெடுத்து முன்னரைவிட இன்னும் அதிக நலமமைந்த இடம் பொருள், ஏவல் உடையவராக உயர் குலத்தில் அவதரிப்பாரென எதிர்பார்க்கின்றோம்.

பத்திராதிபர்.

317

# பூர்ணசந்திரோதய விளம்பரம்.

## சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ இரண்டுதான்.
தனிப்பிரதி விலை அணா 4.

## விளம்பர விகிதம்.

| பக்கம். | 12 மாதம். | 9 மாதம். | 6 மாதம். | 3 மாதம். | 1 மாதம். |
|---|---|---|---|---|---|
| 1 | ரூ 36 | ரூ 30 | ரூ 20 | ரூ 10 | ரூ 4 |
| $\frac{3}{4}$ | ,, 27 | ,, $22\frac{1}{2}$ | ,, 15 | ,, 8 | ,, $3\frac{1}{2}$ |
| $\frac{1}{2}$ | ,, 18 | ,, 15 | ,, 12 | ,, 7 | ,, $2\frac{1}{2}$ |
| $\frac{1}{4}$ | ,, 10 | ,, 8 | ,, 6 | ,, $3\frac{1}{2}$ | ,, $1\frac{1}{2}$ |

ப. நாராயண அய்யர்,
பத்திராதிபரும் மானேஜரும்.

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

---

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil ) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ௸ | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும் தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண ஐயர்,
பிரெசிடெண்டு, பிரஹ்மஞாந சபை, மதுரை.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும். |

## உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10 முதல் ரூபா 10 வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 8 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்.

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்,

வெள்ளைபட்டு வேஷ்டிகள்:—சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷகம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| முழம். | அகலம். | ரூ. | முதல் | வரை. | முழம். | அகலம். | ரூ. | முதல். | வரை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2½ | 7 | ,, | 9 | 8 | 3 | 12 | ,, | 18 |
| 6 | 3 | 10 | ,, | 12 | 9 | 3 | 14 | ,, | 20 |
| 7 | 2½ | 8 | ,, | 12 | 10 | 3 | 15 | ,, | 22 |
| 7 | 3 | 10 | ,, | 14 | | | | | |

விலாஸம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

---

## பெரிய புராணம்.

மூலமும், அரும்பதவுரையும், வசனமும்.

இந்நூல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பிரதிக்கிணங்கப் பரிசோதித்த மூலத்தோடு அரும்பதவுரையும், வசனமும் சேர்த்து உயர்ந்தகடிதத்தில் சுத்தமாக அச்சிடப்பெற்றுள்ளது. இடையிடையே தேவாரங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. டிம்மி 109 பாரம் அல்லது 872 பக்கங்களுடையது, கலிக்கோ பயிண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 3.

1912ளு ஜனவரிமூ 31உக்குள் ஆர்டர்அனுப்புவோர்க்கு ரூ. 2.

திருமூலர் திருமந்திரம் (30 பாக்கள்) ரூ. 1.
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (முற்றிலும்) அணா 6.

அ. சிவசங்கர முதலியார்,
எக்ஸாமினர், சார்டியன்பிரஸ், மவுண்டு ரோட்டு, சென்னை.